தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 307

# பதிப்பு நெறிமுறைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதிமகால் நூல் நிலையம் தஞ்சாவூர்

1991]

விலை ரூ. 10-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண்: 307

# பதிப்பு நெறிமுறைகள்

தொகுத்துப் பதிப்பித்தவர்
பேராசிரியர் மு. சதாசிவம் எம்.ஏ., எம்.லிட்.,
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

சுவடி
பதிப்பித்
தலைப்பு 1]

விலை ரூ. 10-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | பதிப்பு நெறிமுறைகள். |
| பதிப்பாசிரியர் | : | ப. சதாசிவம். |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 307 |
| மொழி | : | தமிழ். |
| பதிப்பு | : | முதற்பதிப்பு. |
| வெளியீட்டு நாள் | : | 1991 |
| தாள் | : | 14.2 கேஜி டபுள் டிம்மி சேசாயி. |
| பக்கம் | : | 72 |
| நூல் அளவு | : | 21 செ.மீ. × 14 செ.மீ. |
| படிகள் | : | 1[illegible]00 |
| எழுத்து | : | 10 புள்ளி. |
| அச்சிட்டோர் | : | கஜேந்திரா பிரிண்டர்ஸ், சிதம்பரம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை. |
| பொருள் | : | பதிப்பு இயல். |
| விலை | : | **10-00.** |

# பதிப்புரை

பதிப்புக்கலை இக்காலத்தில் வளர்ந்து வரும் கலைகளுள் ஒன்றாகும்.

சரசுவதி மகால் நூலகம் இது வரை ஏறக்குறைய முந்நூறு நூல்களை வெளியிட்டுள்ளது. ஏட்டுச் சுவடிகளிலிருந்து நூல்கள் படியெடுக்கப்பட்டுப் பதிப்பாசிரியர்களால் பதிப்பிக்கப் பெற்று வருகின்றன. வெவ்வேறு மொழியறிஞர்கள் சரசுவதி மகால் நூல்களைப் பதிப்பிக்கும் போது தங்களுடைய நெறிகளையே பின்பற்றி வந்திருக்கின்றனர். அதனால் நூல் பதிப்பு முறை பதிப்பாசிரியர்களுக்கேற்ப மாறுபட்டு வந்திருக்கிறது. சரசுவதி மகால் நூல்களுக்கென்று இது வரை பதிப்பு நெறிமுறைகள் உருவாக்கப்படவில்லை.

சரசுவதி மகால் நூல்களுக்கு ஒரே சீரான பதிப்பு நெறி முறைகளை வகுத்திடுவதற்காகவே 'பதிப்பு நெறி முறைக் கருத்தரங்கு' ஒன்று இயக்குநரால் கூட்டப்பெற்றது. இக்கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரைகளே ஈண்டுத் தொகுத்துத் தரப்பெறுகின்றன.

'பதிப்பு நெறி முறைகள்' என்ற தலைப்பிலேயே ஓய்வு பெற்ற முதல் பொது நூலக இயக்குநர் திரு. வே. தில்லை நாயகம் அவர்கள் அழகுறத் தம் கருத்துக்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அவர் தமக்கேயுரிய வகுப்பு முறைகளில் கருத்துக் களைப் பகுத்தும், விரித்தும் தந்திருக்கிறார். அறுபத்தொன்பது தலைப்புக்களில் படைத்துள்ளார். முதிர்ந்த பட்டறிவு வாய்ந்த இவர் தம் கருத்துக்கள் இந்நூலுக்கு அணி செய்கின்றன.

அடுத்து நூற்றுக்கணக்கில் புத்தகங்களை எழுதியுள்ள கழக இலக்கியச் செம்மல் திரு இரா. இளங்குமரன் அவர்கள் ஏட்டுச் சுவடிகளிலிருந்து படியெடுத்துச் செம்பதிப்பாக நூல்களைப் பதிப்பித்தற்குரிய கருத்துக்களைப் 'பதிப்பு நெறி முறை' என்ற தலைப்பில் தந்துள்ளார்.

நூற் பதிப்பு முறைகளைப் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு ச. மெய்ப்பன் அவர்கள் 'பதிப்பாசிரியர் பதிப்பு முறை வளர்ச்சி' என்ற தலைப்பில் அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார். பதிப்பாசிரியரின் பொறுப்புகளையும் கடமைகளையும் தொகுத்துத் தந்துள்ளார். பிழையற்ற பதிப்பைக் கொண்டு வருவதற்குரிய நெறிகளைத் தந்துள்ளார்.

நூற்பதிப்பில் மிகுந்த பட்டறிவு வாய்ந்துள்ள திரு டி. வி. கோபாலய்யர் அவர்கள் 'பதிப்பு நெறி முறைகள்' என்ற தலைப்பிலேயே புகழ்பெற்ற சில பதிப்பாசிரியர்களின் நெறிகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். உரையாசிரியர்கள் பதிப்பு நெறிக்கு உதவி செய்த பான்மையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'பதிப்பு நெறி இயல்' என்ற ஆய்வுக் கட்டுரையை வழங்கிய ஆசிரியர் தம் பெயரைக் குறிக்காமல் விட்டு விட்டார். திருந்திய பாடங்களைக் கண்டு பிடிக்கும் முறைகளைச் சுட்டியுள்ளார்.

இக்கருத்தரங்கில் பங்கு கொண்ட மற்றவர்கள் தங்கள் படைப்புக்களை எழுதியனுப்பவில்லை. அதனால் அவற்றை இந்நூலின்கண் சேர்க்க முடியவில்லை.

பதிப்புத்துறையில் பட்டறிவு மிக்க அறிஞர்கள் இன்னும் பலருளர். அவர்களுடைய கருத்துக்களையும் அடுத்து வரும் கருத்தரங்குகளில் பெற்று நூல்வடிவில் வெளியிட விரும்புகிறோம்.

பதிப்புத்துறையில் பெருஞ்சிறப்புப் பெற்று விளங்கிய டாக்டர் உ. வே. சாமிநாதையர், தாமோதரம் பிள்ளை முதலியோர்கள் இத்துறையில் முன்னோடிகளாக விளங்குகின்றனர். சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியர்கள் அனைவரும் இவர்களுடைய நெறிமுறைகளைப் பின்பற்றாமலிருக்க முடியாது.

சரசுவதி மகாலின் வெளியீடுகள் இன்னும் தரமான முறையில் பதிப்பிக்கப் பெறல் வேண்டும் என்ற நோக்குடன்தான் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. சரசுவதி மகால் நூலகம் நாளடைவில் தனக்கென ஒரு தனிநெறி வகுத்துக் கொண்டு நூல்களை வெளியிடும் என்று நம்புகிறேன்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்களின் அரிய கருத்துக்களை வழங்கிய அறிஞர்கட்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த சிதம்பரம் **கஜேந்திரா அச்சகத்தினருக்கும்**, ஒத்துழைப்பு நல்கிய பணியாளர்களுக்கும், கருத்தரங்கு நடத்துவதற்கும் இந்நூலை வெளியிடுவதற்கும் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மு. சதாசிவம்**
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

30—7—91
தஞ்சாவூர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்பு நெறிமுறைகள்<br>திரு வே. தில்லைநாயகம் | 9 |
| 2. | பதிப்பு நெறிமுறை<br>திரு இரா. இளங்குமரன் | 41 |
| 3. | பதிப்பாசிரியர் – பதிப்பு முறை வளர்ச்சி<br>திரு ச. மெய்யப்பன் | 49 |
| 4. | பதிப்பு நெறிமுறைகள்<br>திரு டி.வி. கோபாலய்யர் | 54 |
| 5. | பதிப்பு நெறி இயல் | 67 |

## மகால் வெளியீடுகள்:

### இலக்கியம்

| | | | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | அருணாசலேசர் மீது வண்ணமும் தாது வருட கரிப்புக் கும்மியும் | .... | 17 | 00 |
| 2 | அதிரியர் அம்மானை | ... | 16 | 00 |
| 3 | சித்ர புத்ர அம்மானை | .... | 26 | 00 |
| 4 | சீவக சிந்தாமணி அம்மானை | ... | 19 | 00 |
| 5 | குசலவன் கதை | .... | 15 | 00 |
| 6 | கஞ்சனம்மானை | .... | 35 | 00 |
| 7 | குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் | .... | 23 | 00 |
| 8 | குடந்தை அந்தாதி | .... | 10 | 00 |
| 9 | காமாட்சி தவசு | — | 12 | 00 |
| 10 | மார்க்கண்டேயன் அம்மானை | ... | 40 | 00 |
| 11 | மாலைத் தொகுப்பு | .... | 18 | 00 |
| 12 | நாராயண சதகம் | .... | 8 | 00 |
| 13 | நளச்சக்ரவர்த்தி கதை | ... | 20 | 00 |
| 14 | பலஜாதிகம் விகடம் | .... | 28 | 00 |
| 15 | பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் | .... | 14 | 00 |
| 16 | பார்சுவநாதர் அம்மானை | .... | 6 | 00 |
| 17 | திரௌபதி அம்மானை | ... | 18 | 00 |
| 18 | புல்லையந்தாதி | .... | 12 | 00 |
| 19 | பிரபோத சந்திரோதயம் | .... | 153 | 00 |
| 20 | இராமர் அம்மானை | ... | 22 | 00 |
| 21 | வீரையன் அம்மானை | .... | 10 | 00 |
| 22 | இராமய்யன் அம்மானை | .... | 18 | 00 |
| 23 | சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ் | ... | 25 | 00 |
| 24 | வண்ணத்திரட்டு | ... | 19 | 00 |
| 25 | வடிவேல் சதகம் | .... | 19 | 00 |
| 26 | சோமயாகப் பெருங்காவியம் | .... | 19 | 00 |
| 27 | பஞ்ச தந்திர வசனம் | ... | 17 | 00 |
| 28 | ஆலம்நபி கதைப்பாட்டு | ... | 15 | 00 |
| 29 | பாரத அம்மானை | ... | 90 | 00 |
| 30 | மலையருவி [மறு பதிப்பு] | .... | 45 | 00 |
| 31 | மருதூர் அந்தாதி | .... | 16 | 00 |
| 32 | சரபோஜி மன்னர் ஆய்வுக்கோவை | .... | 25 | 00 |
| 33 | காஞ்சிமன்னன் அம்மானை | ... | 10 | 00 |
| 34 | நாலடியார் உரைவளம் பாகம் I | .... | 90 | 00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும் சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**இயக்குநர்**
**சரசுவதி மகால் நூலகம்**

# பதிப்பு நெறிமுறைகள்

வே. தில்லைநாயகம்

முதல் பொது நூலக இயக்குநர் (ஓய்வு)

**1. நூல் நெறி**

1.1 நூல்
1.2 தொல்காப்பியர்
1.3 திருவள்ளுவர்
1.4 பவணந்தியார்
1.5 வாணிதாசன்
1.6 தில்லைநாயகம்
1.7 பால்எம்ஜால்
1.8 வளர்ச்சி
1.9 பஞ்சம்

**2. தேர்வு நெறி**

2.1 கருத்தரங்கு
2.2 வெளியீடுகள்
2.3 நூல்பயன்
2.4 மனித இயல்கள்
2.5 சமூக இயல்கள்
2.6 உயிர் இயல்கள்
2.7 இயற்கை இயல்கள்
2.8 தகவல் இயல்கள்
2.9 அங்கும் இங்கும்

**3. நூலாக்க நெறி**

3.1 படிதயாரிப்பு
3.2 அறிவுத்துறைகள்
3.3 உருவங்கள்
3.4 நிறுத்தக்குறிகள்
3.5 முன்னோடிகள்
3.6 புள்ளிகள்
3.7 படிகள்
3.8 படிஎடுப்பு
3.9 அடுத்தவர் பொறுப்பு

**4. பின் அடைவு நெறி**

4.1 பொருள்
4.2 பாடபேதம்
4.3 மேற்கோள் விளக்கம்
4.4 மேற்கோள் ஆட்சி
4.5 சுவைப்பகுதிகள்
4.6 கலைச்சொல்
4.7 நூல்அடைவு
4.8 சொல்அடைவு
4.9 வெளியீடுகள்

**5. முன் அடைவு நெறி**

5.1 பொருள்
5.2 முகப்பு
5.3 நூல் குறிப்பு
5.4 தலைப்பு
5.5 உரிமை
5.6 அணிந்துரை
5.7 பதிப்புரை
5.8 பிற
5.9 பொருளடக்கம்

**6. வெளி அடைவு நெறி**

6.1 பொருள்
6.2 அட்டை
6.3 அட்டை உறை
6.4 உறை மடிப்பு
6.5 உறைக்காப்பு
6.6 இணைப்புத்தாள்
6.7 படத்தாள்
6.8 காகித உறை
6.9 ஒருங்கிணைப்பு

**7. அச்சுநெறி**
7.1 பொருள்
7.2 கையாள வசதி
7.3 காகிதம்
7.4 அளவு
7.5 வாசிப்புக்கேற்பு
7.6 புள்ளி அமைப்பு
7.7 வரி அமைப்பு
7.8 சொல் அமைப்பு
7.9 நூலோரம்
**8. கட்டுநெறி**
8.1 பொருள்
8.2 சுருணை
8.3 நூல்கட்டு
8.4 மடிப்புக்கட்டு
8.5 திறப்புக்கட்டு
8.6 தையல்கட்டு
8.7 கம்பிக்கட்டு
8.8 ஒட்டுக்கட்டு
8.9 நூலகக்கட்டு
**9. பயன்நெறி**
9.1 பொருள்
9.2 தனி விற்பனை
9.3 கடை விற்பனை
9.4 முகவர் விற்பனை
9.5 கல்வி விற்பனை
9.6 நூலக விற்பனை
9.7 ஒப்பந்த விற்பனை
9.8 வெளிநாட்டு விற்பனை
9.9 முயற்சி விற்பனை

# 1. நூல் நெறி

## 1.1 நூல்

நுவல்வது — நுவலப்பட்டது — நூல் ஆயிற்று. ஆதியிலே மனிதன் எழுதுமுறை, எழுதப்பட்ட பொருள், பொருள் பொதி முறை கொண்டு ஏடு (ஏட்டுப் பொறி நீக்கி மெல்லென விரித்து — பெருங்கதை 4: 10: 109), ஓலை (ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன் செக்கர் — நாலடியார்-397), சுவடி (பாட்டுப் புறம் எழுதிய கட்டமை சுவடி — பெருங்கதை 3:1:121), தூக்கு (மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும் — நன்னூல் 53), பனுவல் (பனுவல் நுண் நூல் நடையர் — சிந்தாமணி 464), புத்தகம், (புத்தகமே சாலத் தொகுத்தும் — நாலடியார் — 318), பொத்தகம் (நிறை நூற் பொத்தக நெடுமனை யேற்றி — பெருங்கதை 1:34:26) என்று அழைக்கப்பட்டது. இத்தகு நூல் எப்படி இருக்கும் அல்லது இருக்கவேண்டும்?

## 12. தொல்காப்பியர்

கி.மு. 7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியர் ஆரம்பமும் முடிவும் முரண்பாடு இல்லாமல், தொகுத்தும் வகுத்தும், பொருள் விளக்கி, நுண்மை உடையதாக நூல், இருக்கவேண்டும் என்கிறார். அவர் வாக்காலேயே வரைவ தென்றால்

நூல் எனப் படுவது நுவலும் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற வரையோடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே (1422)

என்று அமைய வேண்டும்.

## 13. திருவள்ளுவர்

நற்குணமுள்ள மேன்மையர் கொண்ட தொடர்பு—நட்பு— பழகும் போதெல்லாம் இன்பம் தரும் அது போலவே நூல் தனது பொருளால் கற்கும் தொறும் இன்பம் நல்கும்; நல்கவேண்டும் என்பதை

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (783)

என்று வள்ளுவர் வரையறுக்கிறார்.

## 14. பவணந்தியார்

கி.பி 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவணந்தியார் தொல் காப்பியர், திருவள்ளுவர் மற்றும் பிறர் கருத்துக்களை காலத் திற்கேற்ப, கருத்து வளர்ச்சிக்கேற்ப வளர்த்து நூல் என்பது 2 பாயிரங்கள் கொண்டு, 3 வகையாக (முதல், வழி மற்றும் சார்பு), 4 பயன்கள் (அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு) நோக்கி, 7 மதங்கள் தழுவி 10 குற்றங்கள் நீக்கி 10 அழகுகள் கொண்டு, 32 உத்திகளுடன் இயல், அதிகாரம் முதலியன பகுத்து உரையுடன் திகழவேண்டும் என்கிறார் இதையே

நூலின் இயல்பே நுவலின் ஓர் இரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்
நாற்பொருள் பயனோடு எழுமதம் தழுவி
ஐயிரு குற்றமும் அகற்றி அம் மாட்சியொடு
எண்ணான்கு உத்தியினோடு ஒத்து படலம்
என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை
விருத்தி ஆகும் விகற்பநடை பெறுமே!

என்கிறது நன்னூல் (4).

## 15. வாணிதாசன்

நம்மோடு வாழ்ந்து இயற்கையை எழிலோவியமாய்த் தீட்டிக் காட்டிய வாணிதாசன் நூல்வளர்ச்சியை, தன்மையை, தற்போதைய இருப்பை

கருத்தினில் பிறந்து மக்கள்
காதினில் தவழ்ந்து தாளிக்
குருத்தினில் வளர்ந்து தோலில்
குன்றினில் துள்ளி யோடி
அருங்கலை அள்ளி அள்ளி
அளிக்கின்ற வள்ள லாகி
விருந்தூட்டு கின்றாய் இன்று
வெள்ளைத்தாள் கோட்டைக் குள்ளே!

(வாணிதாசன்—எழிலோவியம்)

என்று பாடி இருக்கிறார்.

## 16. தில்லைநாயகம்

நூலுக் கென்ன வேலை?—நல்ல
நூலுக் கென்ன தேவை?
பாசமுள்ள தாயைப்போல பேச வேண்டும்;
படிப்புள்ள தந்தையைப்போல ஊக்கவேண்டும்;
வாசமுள்ள மலர்போல மணக்கவேண்டும்;
வாடிக்கை யாளர்தன்னைப் பெருக்க வேண்டும்;
வாசகரின் சிந்தனையைத் தூண்ட வேண்டும்;
வடிக்கின்ற கருத்தாலே சிறக்கவேண்டும்;
நேசமுள்ள நூலகரால் உயர வேண்டும்;
நேர்மையுள்ள படிக்குநரால் சிறக்க வேண்டும்.

நூலுக்கென்ன வேலை என்கிறார் நூலாளர் வே. தில்லை நாயகம் (இந்திய நூலக இயக்கம், பதிவு, 1981 பக்கம் 92).

### 17. பால் எம் ஜால்

இத்தகுநூலின் ஓட்டம் பொருள் அமைப்பு ஓட்டம்—26 பண்புகள் கொண்டதாக — ஆங்கில அகரவரிசைப் போக்கின தாககாட்டுகிறார் ஆங்கிலப் பேராசிரியர் பால் எம் ஜால் (Elements of Technical Report Writing, 1963 by Paul M Zall). அதன் விவரமிதோ'

1. Accuracy — துல்லியம்
2. Brevity — சுருக்கம்
3. Confidence — நம்பிக்கை
4. Dignity — கண்ணியம்
5. Emphasis — அழுத்தம்
6. Facility — வாய்ப்பு எளிமை
7. Grammatical correctness — இலக்கணத்திருத்தம்
8. Honesty — நேர்மை
9. Illustration — விளக்கம்
10. Judgement — தீர்ப்பு
11. Knowledge — அறிவுப்புலமை
12. Logic — காரண காரியத் தொடர்பு
13. Mechanical neatness — அமைவு நேர்த்தி
14. Normal procedure — விதிப் பாங்கு
15. Objectivity — புலனறி தன்மை
16. Planning — திட்டம்
17. Qualification — தகுதி
18. Revision — திருத்தம்
19. Straight Sentences — நேரடிச் சொற்றொடர்கள்
20. Thoroughness — செம்மை
21. Unity — ஒருமைப்பாடு
22. View point — நோக்கு
23. Word choice — சொற் தேர்வு
24. Xeniality — விருந்துறவு
25. Your point; and — உங்கள் நிலை; மற்றும்
26. Zest — ஆர்வம்

## 18. வளர்ச்சி

யுனெசுகோ புள்ளி விவர ஆண்டேடு (UNESCO - Statistical Year Book) உலக நூல்வெளியீட்டுக்கணக்கை மொத்தமாக, நாடுவாரியாக, துறைவாரியாக வெளியிட்டு வருகிறது. இதில் வரும் சில தகவல்கள்.

| ஆண்டு | எண்ணிக்கை ஆயிரங்கள் | ஒவ்வொரு இலட்சம் பேருக்கும் கிடைக்கும் நூல்கள் |
|---|---|---|
| 1955 | 2,69 | 13.1 |
| 1960 | 3,32 | 14.4 |
| 1965 | 4,26 | 16.5 |
| 1970 | 5,21 | 18.7 |
| 1975 | 5,68 | 18.5 |
| 1979 | 6,89 | 15.6 |
| 1985 | | |
| 1989 | | |

இதிலிருந்து புரிவது என்ன? 1970-க்கு பிறகு மக்கள் தொகைப் பெருக்கத்தால் தலைக்குக்கிடைக்கும் நூல் கணக்குக் குறைகிறது!

உலக நூல்கள் போட்டியிலே இந்திய நூல்கள்-தமிழ்நூல்கள் உற்பத்தி நிலை என்ன தெரியுமா?

| ஆண்டு | மொத்த நூல்கள் | தமிழ் நூல்கள் |
|---|---|---|
| 1962—63 | 5,240 | 618 |
| 1967—68 | 7,406 | 459 |
| 1972—73 | 7,826 | 545 |
| 1977—78 | 8,861 | 1,380 |
| 1980—81 | 11,860 | 1,454 |
| 1988—89 | | |

இதிலிருந்து புரிவது என்ன? நூலகத்திற்கு நூல் அனுப்ப வேண்டும் என்று, சட்டம் தீவிரமான பிறகு, தமிழ்நாடு பொது நூலகத் துறையில் பெருமளவுக்கு நூல்களை வாங்க ஆரம்பித்த பிறகு, முறையான கணக்கு எடுத்தபோது மொத்த நூல்கள் மற்றும் தமிழ் நூல்கள் கணக்குக் காணமுடிகிறது இப்போது.

## 1.9 நூல்பஞ்சம்

இப்படி நூல்கள் எண்ணிக்கை அதிகமாகத் தெரிந்த போதிலும் எழுதப் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு மனிதருக்கும் கிடைக்கும் நூல் கணக்கு-அறிவு உணவுக் கணக்கு-பஞ்சமாக இருக்கிறது என்கிறது. யுனெசுகோ அறிக்கை. இந்தக் கணக்குப் படி வட அமெரிக்காவிலும் அய்ரோப்பாவிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர் ஒவ்வொருவருக்கும் 2,000 பக்கங்கள் கிடைக்கிறதாம். ஆனால் இந்தியாவில் சராசரியாக ஒவ்வொருவருக்கும் 32 பக்கங்கள்தான் கிடைக்கிறதாம். அதாவது மேலைநாட்டாருக்குக் கிடைக்கும் அறிவுணவில் 60-இல் ஒரு பங்குதானாம்; நூல் கிடைப்புப் போல உணவு நிலையும் 60-இல் ஒரு பங்கு கிடைத்தால் என்னாவது?

இந்தப் பஞ்சத்தைத் துடைக்க, குறைக்க-மாற்ற மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் முயன்றுகொண்டு இருக்கின்றனர். தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகமும் இதில் கலந்து கொள்ள முன்வந்துள்ளது. விளைவு?

# 2. தேர்வுநெறி

## 2.1 கருத்தரங்கு

சரசுவதி மகாலில் பல்வேறு மொழிகளில் பொதிந்து கிடக்கும் அறிவுக் களஞ்சியத்தை-ஓலைச்சுவடிகளில் அடங்கிக் கிடக்கும் அறிவுக்குவியலை-இன்றைய நூல்வடிவில் வழங்குவதற்கான முயற்சிகளில் ஒரு கூறாக, இன்று 16—12—89-இல் பதிப்பு நெறி முறைக் கருத்தரங்கு நடக்கிறது. இதில் பத்து வல்லுநர்கள் பங்கேற்கின்றனர்.

செய்யமுடிந்ததைச் சொல்லியும் சொல்வதைச் செய்து காட்டியும் பழக்கப்பட்ட ஒருவரின் கருத்துரையாக 40 ஆண்டுகள் நூலாளராக, நூலகராக, நூலக இயக்குநராகக் கண்ட அனுபவ ஆய்வுரையாக அமைகிறது இக்கட்டுரை.

## 2.2. வெளியீடுகள்

இதுவரை தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் மொத்தம் 312 நூல்களை வெளியிட்டுள்ளது. இதில் தமிழ்ச்சுவடி நூல்கள் 154. சமஸ்கிருதச் சுவடி நூல்கள் 97. மராத்திச் சுவடி நூல்கள் 38. தெலுங்குச் சுவடி நூல்கள் 19. ஆங்கில நூல்கள் 4 ஆகும்.

## 2.3 நூல்பயன்

இத்தகு நூல்களை வெளியிடும் நோக்கம், பயன் என்ன? இன்றைய அறிவுத்தரத்தை மேலும் கூட்ட வேண்டும். முடியாத போது அறிவுப்போக்குக்கு வித்தியாசமான பொருள் காட்ட வேண்டும். பழைய சுவடிப் பொருளை இன்றைய அறிவு முயற்சிக்கு ஒப்பிட்டுங் காட்ட வேண்டும். இந்த மண்வாசனையை மற்றவருக்கு எட்டச் செய்ய வேண்டும். இது பெரும்பாலும் அறிவியல் முயற்சியாக இருப்பது நல்லது.

இது முடியாத போது உணர்வியல் முயற்சியாக முன்னேற உதவவேண்டும். அதாவது மனிதனின் மனப்பண்பை வளர்க்க, பண்படுத்த முயலவேண்டும். இதற்கு இலக்கியம் கலைகள் முதலியன பயன்படுத்தப்பட வேண்டும். சமூகவியல் வளர்க்கும் சுவடிக் கருத்துகளும் இதில் பெரிதும் இடம்பெற வேண்டும். நாம் வெளியிடும் நூல்கள் இம்முறையில் அமைந்துள்ளனவா என்று பார்ப்போமே!

## 2.4 மனித இயல்கள்

இந்திய நூலக இயக்க முன்னோடி டாக்டர் அரங்கநாதன் வகுத்த கோலன் பகுப்பு முறைப்படி (Colon Scheme of Classification of Dr. Ranganathan) நுண்கலைகள் (Fine Arts), இலக்கியம் (Literature), மொழி இயல் (Linguistics), சமயம்

(Religion), தத்துவம் (Philosophy) முதலிய துறைகள் மனித இயல்கள் (Human Sciences) எனப்படும்.

1964 முதல் 1981 வரையிலான 18 ஆண்டுகளில் தமிழ் வெளிவந்த நூல்களில் - 14,003 தமிழ் நூல்களில் – 7585 நூல்கள் அதாவது 54.2 விழுக்காடு - இப்பிரிவில் தான் வெளியாகி உள்ளன. அதிலும் தமிழ் இலக்கியத்தில் 5955 நூல்கள் (புதினம் 3317, கவிதை 1675, கட்டுரைகள் 397, நாடகம் 343, பொதுமை 161, பொழிவு 33, கடிதங்கள் 29) அதாவது 30.6 விழுக்காடு என்று கணக்கு வரும்போது நமது முனைப்பெல்லாம் இலக்கியத்தில்தான் – அரைத்த மாவையே அரைப்பதில்தான் - இலகுவான படைப்பாக்கத்தில்தான் நமக்கு நட்டமெனத் தெரிகிறது.

## 25. சமூக இயல்கள்

உள்ளஇயல் (Psychology), கல்வி (Education), நிலஇயல் (Geography), வரலாறு (History), அரசியல் (Political Science), பொருளாதாரம் (Economics), சமூகஇயல் (Sociology), சட்ட இயல் (Law) முதலியன சமூக இயல்கள் (Social Sciences) எனப்படும்.

1964 முதல் 1981 வரையிலான 18 ஆண்டுகளில் வெளியான 14,003 தமிழ் நூல்களில் 4086 தமிழ் நூல்கள் அதாவது 29.2 விழுக்காடு சமூக இயல்களில் தான் வெளியாகி உள்ளன.

## 26. உயிர் அறிவியல்கள்

உயிர்இயல் (Biology), புவிஇயல் (Geology), தாவரஇயல் (Botany), வேளாண்இயல் (Agriculture), பிராணிஇயல் (Zoology), மருத்துவ இயல் (Medicine), பயன்படுகலைகள் (Useful Arts) முதலியன உயிர் அறிவியல்கள் (Biological Sciences) எனப்படும்.

1964-1981 காலத்தில் வெளிவந்த 14,003 தமிழ்நூல்களில் 787 தமிழ் நூல்கள் – அதாவது 5.6 விழுக்காடு இத்துறைகளில் வெளிவந்துள்ளன.

## 27. இயற்கை அறிவியல்கள்

கணக்கியல் (Mathematics), இயற்பு இயல் (Physics), பொறி இயல் (Engineering), இயைபு இயல் (Chemistry), நுணுக்க இயல் (Technology) முதலியன இயற்கை அறிவியல்கள் (Natural Sciences) எனப்படும்.

1964–81 காலத்தில் வெளிவந்த 14,003 நூல்களில் 4.4விழுக்காடு வரும் 618 தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. இத்துறைகளில்

## 28. தகவல் இயல்கள்

அறிவு உலகம் (Universe of Subjects), கருத்துப் பரிமாற்றம் (Communication Sciences), நூலகஇயல் (Library Sciences), நூல் இயல் (Book Science), மக்கள் தொடர்பு (Mase Communication), நிருவாக இயல் (Management Science) முதலியன தகவல் இயல்கள் (Generalia Sciences) எனப்படும்.

1964–81–இல் வெளியான 14,003 தமிழ்நூல்களில் 6.6 விழுக்காடு வரும் 927 நூல்கள் இத்துறைகளில் வெளிவந்துள்ளன.

## 29. அங்கும் இங்கும்

இங்கு, இந்தியாவில் தமிழில் வெளியாகும் நூல்களைத் துறைகள் வாரியாகப் பார்க்கும்போது மனித இயல்களில் சிறப்பாக – இலக்கிய இயல் – சிறப்பிடம் பெறுகிறது. இது மனிதனுக்கு உடனடியாக படிக்கும் வாய்ப்பைக் கொடுப்பது உண்மை தான்.

ஆனால் முன்னேறிவிட்ட மேனாடுகளில் வரும் நூல்கள் உயிர் அறிவியல்கள், இயற்கை அறிவியல்கள், சமூக இயல்கள், மனித இயல்கள் என்று இடம்பெறுவதைக் காணும்போது, நாமும் முன்னேற வேண்டுமானால் உணர்வியல் களைக் குறைத்துக் கொண்டு அறிவியல்கள் தொடர்பான நூல்களைக் கொண்டு வர முயலவேண்டும். முயல்வோமா?

# 3. நூலாக்க நெறி

## 31. நூல்படி தயாரிப்பு

உருவாக்கும் பாத்திரத்தை - சட்டியை, பானையை, கலயத்தை, தொட்டியை, பிறவற்றை நினைவில் வைத்துக் கொண்டு சக்கரத்தில் மண் அணைக்கும் குயவனைப் போல, மனக்கண்ணில் இருக்கும் ஓவியத்தை திரைச்சீலையில் தீட்ட வண்ணங்களையும் தூரிகைகளையும் பயன்படுத்தும் ஓவியன் போல, மக்கள் பாராட்டையும் பாராட்டில் குவியும் பணக் கட்டுகளையும் மனதில் இருத்தி கடுகளவு கதையில் கனத்தையும் கானகத்தையும் கனவுக்காட்சிகளில் கவர்ச்சிக் கன்னிகளைக் கொண்டு வண்ணங்களில் வனப்புக்காட்டும் திரைப்பட இயக்குநர் போல, பதிப்பாகும் நூல்கள் கண்டவர் களிப்புறும் வண்ணமும் காணாதார் தேடிப்பிடிக்கும் வகையிலும் கவர்ச்சியாக, கையாளவசதியாக, வாசிப்புக்கு ஏற்றதாக அமையும் வகையில் கையெழுத்துப்படி தயாரிக்கப்பட வேண்டும். அது எப்படி?

## 32. அறிவுத் துறைகள்

இன்று அறிவு பரந்து விரிந்து பல்வேறு துறைகளாக வளர்ந்து விட்டன. எனவே எடுத்துக் கொண்ட அறிவுத் துறையின் சிறப்பு, அமைப்பு, நோக்கு, போக்கு, குறியீடு முதலியன அறிந்து புரிந்து கையெழுத்துப் படி தயாரிக்க வேண்டும்.

சான்றாகச் சாற்றினால் அறிவியல்துறைகள் தொடர்பாக விளக்கப்படும் தலைப்புத் தொடர்பான குறியீடும் விளக்கப்படமும் தெளிவாக எழுதப்படவேண்டும் காப்பியமரபின் அடி, சீர், சந்தி, சொல் அமைப்பு முதலியன புரியும் படி தக்க நிறுத்தக் குறி களுடன் பாடபேதம் தெரிந்து எழுதப்பட வேண்டும்.

## 33. உருவங்கள்

இன்று பெரும்பாலான நூல்கள் உரைநடையில் காண் கிறோம், ஆனால் பழைய நூல்களில் உரைநடை, நாடகம்,

செய்யுள், உரைநடை உள்ளமைந்த செய்யுள் உருவங்களே மிகுதி. மிகப்பழைய நூல்கள் செய்யுள் உருவத்தில் தான் இருக்கும். அதாவது உருவங்கள் (Forms) வேறுபடுகின்றன.

எனவே உரைநடையில் தலைப்புப் பகுதி, பகுதிப்பிரிவு, பிரிவுப்பகுதி இருக்குமாயின் அப்படியே எழுதவேண்டும். அது இல்லாத நிலையில் பொருள் விளக்கத்திற்கு தேவைப்படின் புதிதாகச் சேர்த்து எழுதப் படவேண்டும்.

நாடக அமைப்பாயின், காலம், இடம், பாத்திரங்கள் விளங்கும் வகையில் பொருளோட்டம் குன்றாத முறையில் கையெழுத்துப் படி கருத்தாக எழுதப்படவேண்டும்.

செய்யுள் அமைப்பாயின் அடி, சீர், சந்தி, சொல் அமைப்பு முதலியன தற்காலத்தினரும் புரிந்து படித்து பயன்பெறும் முறையில் தக்க வகையில் பாடபேதம், மேற்கோள்விளக்கம், மேற்கோளாட்சி முதலியனவைகளோடு எழுதப்பட வேண்டும்.

## 34. நிறுத்தக் குறிகள்

நிறுத்தக்குறிகள் அண்மையவரவாயினும் நூலாக்கத்தில் - சிறப்பாக சுவடிகளில் இருந்து அச்சிட கையெழுத்துப்படிகள் தயாரிக்கும் முயற்சியில் - பொருள் விளக்கும் முறையில் தகு முறையில் பயன்படுத்தப்படவேண்டும்.

இம்முறையில் முற்றுப்புள்ளி (.), காற்புள்ளி (,), அரைப் புள்ளி (;), முக்காற்புள்ளி (:), வினாக்குறி (?) வியப்புக்குறி (!) முதலிய நிறுத்தக்குறிகளை ஒரே சீராக நூலோட்டம் முழுதும் அமையும்படி எழுதப்பட வேண்டும்.

இதில் தமிழ் நூற்பதிக்குநர்கள் ஒருங்கிணைந்து ஒரு திட்ட வட்டமான தரநிருணயம் (Standard) செய்து இந்தியத் தர நிருணயத்தரம் ஆக்க முன்வரவேண்டும்.

## 35. முன்னோடிகள்

ஓலைச்சுவடிகளில் இருந்து அச்சு நூல் பதிப்பித்த முன் னோடிகளாகிய தாமோதரம் பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், உ.வே. சாமிநாத அய்யர், வை.மு. கோபால

கிருஷ்ணமாச்சாரியார், வையாபுரி பிள்ளை முதலியோர் பதிப்பித்த நூல்களுள் பதிப்பாசிரியர் ஒவ்வொருவரும் பார்த்து படித்து பதிப்புநெறி உணரவேண்டும்.

மேலும் சைவ சிந்தாந்த மகா சமாஜம், திருவாவடுதுறை மடம் மற்றும் திருபனந்தாள் மடம், மர்ரே. எம். இராசம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முதலியன பதிப்பித்த நூல்களைப் பார்த்து படித்து செயற்பட முயல வேண்டும்.

## 36. அச்சுப்புள்ளிகள்

நூல்அமைப்பின் பகுதி (Part). பகுதிப்பிரிவு (Chapter) பிரிவுப்பகுதி (Section), தலைப்பு (Heading) முதலியன அச்சுப் புள்ளிகள் அமைப்டை குறிப்பிடுவதன் மூலமே படித்தரத்தை (Hierarchy) நிர்ணயிக்கலாம்.

சான்றாகச் சாற்றினால் பகுதி எண்ணையும் தலைப்பை யும் 18 புள்ளிகளிலும், பகுதிப்பிரிவின் எண்ணையும் தலைப்பை யும் 14 புள்ளிகளிலும், பிரிவுப்பகுதியின் எண்ணையும் தலைப் பையும் 12 புள்ளிகளிலும், உரைநடையின் இடையே வரும் பாடல் பகுதிகளை 10 புள்ளிகள் தடித்த அமைப்பிலும் அடிக் குறிப்புகளை 8 புள்ளிகளிலும் அமைக்குமாறு கையெழுத்துப் படியிலேயே எழுதி விடவேண்டும்.

பிறகு நூல் அச்சாகும்போது அச்சகத்தினருடன் கலந்தாலோசித்து அச்சக இருப்புக்கு ஏற்றவாறு அச்சுப்புள்ளிகளை சீரமைத்துக் கொள்ளலாம். கட்டுரையாளர் எப்போதும் இப்படித்தான் எழுதிவருகிறார் கடந்த 30 ஆண்டுகளாக.

## 37. படிகள் எண்ணிக்கை

அச்சிடப் போகும் நூலின் கையெழுத்துப்படி தயாரிக்கும் போதே கரிமத்தாள் (carbon paper) உதவி கொண்டு இரண்டு/ மூன்று படி.கள் — பிரதிகள் தயாரித்து விட வேண்டும்.

நாம் இருக்குமிடத்திலேயே நூல் அச்சாகும் வாய்ப்பு இருந்தால் இரண்டு பிரதிகள் போதும். ஒன்றை அச்சகத்தினரிடம்

அச்சுக்குக் கொடுத்து விட்டு ஒன்றை நாம் மெய்ப்படிப் பார்க்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அச்சகம் தொலைதூரத்தில் இருந்தால் அச்சகத்திற்கு ஒரு படியும் அங்கிருந்து மெய்ப்படிப் பார்ப்பவருக்கு ஒரு படியும் அனுப்பிவிட்டு ஒரு படியை நாமே வைத்துக் கொள்ள வேணும். அச்சகப்படி தவறிப்போனாலும், மெய்ப்புப் பார்ப்பவர் படி தவறிப் போனாலும் பதிப்பாசிரியர் இடமுள்ள படியைக் கொண்டு அச்சுவேலையை குறிப்பிட்ட திட்டப்படி செய்து முடிக்கலாம்.

நூல் ஆங்கிலமாயின் தட்டெழுத்துப்படியும் தமிழாயின் கையெழுத்துப்படியும் விரும்புகின்றனர் அச்சகத்தர் என்பர்.

## 38. படிஎடுப்பு

நூல் எப்படி அச்சாக வேண்டும் என்பதை நினைவில் இருத்தி நூல் கையெழுத்துப்படி தயாரிக்கப்பட வேண்டும்.

எழுத்து நூலக எழுத்தாக (Library Hand - Bold upright letter), அச்சக எழுத்தாக (Print letter) அமைவது போல எழுதப்படவேண்டும்.

அதாவது அதிகம் படிக்காத அச்சுக் கோப்பவரும் எழுத பட்ட எழுத்தை ஐயமில்லாது புரிந்து வேலை செய்யும் முறையில் எழுத்து ஒவ்வொன்றும் நேராக தெளிவாக எழுதப்பட வேண்டும். சொற்களுக்கு இடையே வரிகளுக்கு இடையே தக்க இடைவெளி கொண்டு எழுதப்பட வேண்டும்.

செய்யுள்களாக இருப்பின் அடிசீர், சந்தி. சொல் அமைப்பு புரியும் படியாக, அச்சுக் கோப்பவர் புரியும் படியாக வருங்கால வாசகர் படிக்கும் படியாக எழுதப்படவேண்டும்.

நூலிடையே வரும் அட்டவணைகளும் பிறவும் வரிசை எண்களுடன் தலைப்புகளுடன் தெளிவான எண் அமைப்புக் கொண்டு எழுதப்பட வேண்டும்.

## 39. அடுத்தவர் பொறுப்பு

சுருங்கச் சொன்னால் மெய்ப்புப்பாப்பவர் பொறுப்பிலேயே, அச்சகத்தினர் பொறுப்பிலேய பதிப்பாசிரியர் கருதியப்படி

அச்சாகும் முறையில் கையெழுத்துப்படி தயாரிக்கப்பட வேண்டும். இது ஏன்?

நூலாசிரியரே, பதிப்பாசிரியரே நேரில் அருகில் இருந்து அறிவுரைக் கூறி அச்சடிக்கும் வாய்ப்பு வசகு, காலம் மாறி வருகிறது என்பதை உணரவேண்டும்படி எடுப்பவர்.

# 4. பின் அமைவு நெறி

## 41. பொருள்

மூலநூலோட்டத்தில் குறிக்க வேண்டியவைகளை குறிக்க முடியாத கட்டத்தில் படிக்குநர் வாசகர் நலனுக்காக எடுத்து இயம்ப வேண்டிய பகுதிகளை வரிசைப்படுத்தி அடைவு செய்து கொடுப்பது பின் அடைவுப் பகுதி (Appendices) எனப்படும். இதில் சிறப்பான சில தொகுத்துப் படிக்கலாம்.

## 42. பாடபேதம்

பெரும்பாலான பழைய நூல்கள் மக்கள் மனதிலே நிலைபெற்று வழங்கு வகையில் தொடரும் வகையில் செய்யுள் வடிவாலே தான் எழுதப்பட்டன. இவைகளுக்கு காலப்போக்கில் உறைகளும் எழுதப்பட்டன. இவை மறு பிரதி செய்யப்படும்போது கவனக்குறைவால் சிலசமயமும் புலமையில் சில சமயமும் பாடபேதங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

இத்தகைய பாடபேதங்கள் முன்னெல்லாம் பாடபேதம் வரும் பக்கங்களில் அடிக்குறிப்பாக காட்டப்பெற்றன. இப்பாட பேதங்கள் முன்பின் பகுதிகள் சேர்த்துக் கொடுக்கும் போது அடிக் குறிப்புப்பகுதி அதிகமாகி மூலநூலோட்டம் தடைபடுவதுண்டு. இதைத் தவிர்க்க பாடபேதங்களை முழுமையாக பின் அடைவில் முதற்பகுதியாக அமைப்பதே சிறப்பாகும்.

## 43. மேற்கோள் விளக்கம்

நூலோட்டத்தில் வரும் சிறப்புக் கருத்துக்களுடன் ஒப்புமைப் பகுதிகளை பயிலும் நூலில் இருந்தும் பிற நூல்களில் இருந்தும் சொல் வடிவம், சொற்பொருள், இலக்கண அமைதி முதலியன தற்காலப் பதிப்புகளில் காட்டுவது மரபு. இவை நூற்காலத்திற்கு

முந்தியவைகளில் இருக்கவேண்டும். இதை வாசகர் வசதிக்கு, ஆராய்ச்சியர் பயனுக்கு அடைவு செய்து பின் அடைவில் இரண்டாம் பகுதியாக அமைக்கவேண்டும்.

## 44 மேற்கோள் ஆட்சி

எடுத்துக் கொண்ட நூலின் நூற்பகுதிகளை பின்னூலார் எப்படியெப்படி எந்தெந்த நூலில் மேற்கோள் முறையில் கையாண்டு உள்ளனர் என்பதை விளக்குவது மேற்கோளாட்சி எனப்படும். இது நூலின் பெருமையை, பின்னூல்களில் ஏற்படுத்திய தாக்கத்தை விளக்க உதவும். ஒப்புநோக்கும் படிப்புக்கு பயன்தரும்.

## 45 சுவைப்பகுதிகள்

நூலில் வரும் சுவைப்பகுதிகள், தாவரஇனங்கள், விலங்கினங்கள், கதைகள், வழக்கங்கள், உவமைகள், வருணனைகள், கட்டுரைத் தொடர்கள் முதலியவற்றை – தேவைக்கேற்ப இடவசதிக்கேற்ப இணைக்கலாம். பின் அடைவில்.

## 46 கலைச்சொல்

நூலில் வரும் சிறப்பமைப்பு கலைச்சொற்களை சொற்றொடர்களை அகரவரிசையில் அமைத்து பொருள் கொடுக்கவேண்டும்.

## 47 நூல் அடைவு

எடுத்துக் கொண்ட நூலில் வரும் நூல்களின், ஆசிரியர்களின் குறிப்புகளை அமைத்து கிடைத்த மட்டிலும் விவரமாகக் கொடுக்கவேண்டும்.

## 48 சொல் அடைவு

நூலில் வரும் சிறப்புக்கருத்துகள், ஆட்பெயர், இடப்பெயர் முதலியவற்றை இணைத்த சொல்அடைவு (Index) இணைக்க வேண்டும். இறுதியாக, இதுவும் தொடர் சொல் அடைவு (Relative Index), கருத்தறிவிக்கும் சொல் அடைவு (Expressive Index) அமைப்பினதாக அமைக்க வேண்டும்.

பொதுவாக நூற்பொருளும் சொல்லடைவும் 30:1 விகிதத்தில் இருக்கலாம் என்கிறார் ஆங்கநாதன். இவர் முயற்சியால் உருவாக்கப்பட்ட அகரவரிசை அமைப்பு (IS: 382 – 1952 Practice for Alphabetric arrangement as amended by the Bureau of Indian Standards) தர நிருணயம் இங்கு கருதத் தக்கது.

### 49. வெளியீடுகள் விவரம்

பின் அடைவின் கடைசிப் பகுதியாக பதிப்பகத்தின் சிறப்பாக சரசுவதி மகால் நூலகம் போன்ற நிறுவனங்களின்—வெளியீடுகள் பற்றி—தற்போது உடனடியாகக் கைவசமிருந்து விற்கக் கூடிய நூல்களின் பட்டியல் இணைக்கவேண்டும். இத்துடன் இவைகளை பெறும் வழி முறைகளையும் விளக்க வேண்டும்.

## 5. முன் அடைவு நெறி

### 50. பொருள்

நூற்பொருளைத் தயாரித்தபிறகு, பின் அடைவுப் பகுதி களைத் தயாரித்தபிறகு நூல் தலைப்பு, நூற்பொருள், ஆக்க முயற்சி முதலியவைகளை முகப்பு, நூல்குறிப்பு, தலைப்பு உரிமைக் குறிப்பு அணிந்துரை, பகுதறிவுக்குறிப்பு, பொருள் அடக்கம், பிழைத்திருத்தம் முதலியவைகளை கொண்ட முன் அடைவுப் பகுதியாக தனிப்பக்க அமைப்பாக உரோம எண் அமைப்பாக, அமைக்கவேண்டும். (Preliminary Pages).

### 52. சுருக்கத்தலைப்பு

நூலைக் குறைத்தும் நூலின் இணைப்புத் தாளுக்கு (End Paper) அடுத்துக் காணப்படுவது சுருக்கத்தலைப்பு அல்லது முகப்புப் பக்கம் (Half Title) எனப்படும் இதில். நூல்தலைப்பும் ஆக்கியோர் பெயரும் இருக்கவேண்டும், இருக்கும் இப்பாணியை இன்றும் ஆங்கில நூல்களில் காணலாம்.

இம்முறை பெரும்பாலான தமிழ் நூல்களில் சிக்கணம் கருதி தவிர்க்கப்படுகிறது. மூலநூலின் பாதுகாப்புக் கருதியாவது இது

தவறாமல் கொடுக்கப்பட வேண்டும். சரசுவதி மகால் போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களாவது இதைத் தொடரவேண்டும்.

இந்திய தர நிருணயக் கழகம் வெளியிட்டுள்ள சுருக்கத் தலைப்புத் தரம் (IS:791 Half Title leaf of a Book) கருதத் தக்கது.

## 53. நூல் குறிப்பு

சுருக்கத்தலைப்புக்குப் பின்பக்கம் நூற்றொகை குறிப்புகள் (Bibliographical Data) அமையவேண்டும் ஆங்கிலத்தில், இது தலைப்புப் பக்கத்திற்கு எதிர்ப்புறம் இருக்கும் இதன் மூலம் நூல்கள் கட்டுக்கு வைக்கும் போது நூல்மொழி அறியாத நூலார்வலர் நூல் விவரமறிய உதவும் இம்முறையில் அமைந்த நூல் குறிப்புகள் அண்மையில் தில்லியில் நடந்த உலக நூல் சந்தைக் காட்சியில் பாராட்டுப் பெற்றன இக்குறிப்புப் பொது வாக 20 விவரங்களைத் தகும் அதன் விவரமாவது.

### BIBLIOGRAPHICAL DATA

1. Title (In language of the Book and in English)
2. Author:
3. Language:
4. Editor:
5. Publication (date):
6. Copyright (holder): © ..........
7. Paper used: (Name and weight)
8. Paper size: (Name ie Cover Demy. Royal etc) lnth arca in cms
9. Type: (Area in cms and points used)
10. Paper: (Preliminary papers + Textpaper = Total)
11. Copy printed: (Number)

12. Printer :
13. Artist :
14. Binding :(Nature ie stapling, Section, Opcen)
15. Publisher:
16. Price:
17. Subject (of the book):
18. Synopsis:
19. Call Number:
20. Special Information: No. of Parts:
No. of Chapters:
No. of Sections:
No. of References:
No. of Words Insed:

Weight of the Book Grams.

இக்குறிப்புகள் முதலில் சுருக்கமாக மேனாட்டு ஆங்கில நூல்களில் கொடுக்கப்பட்டன. முழுத்தேவையை முழுமையான தகவல் தேவையை நடைமுறைக்குக் கொண்டுவந்தார் முதல் பொது நூலக இயக்குனர் (வே. தில்லைநாயகம்). இன்று இப்பாணி எல்லாத் தமிழ் நூல்களிலும் காணலாம். சுருங்கச் சொன்னால் இந்தியப் பதிப்பு நெறிக்கு தமிழ்நாட்டின் கொடையிது எனலாம்.

எனினும் சிக்கனம் கருதிய பதிப்பாளர் சிலர் அரைத் தலைப்பை ஒதுக்கிவிட்டு தலைப்பக்கத்தின் பின்னால் கொடுத்து வருகின்றனர். இக்குறிகளை முழுப்பயன் பெறவேண்டுமானால் தலைப்புப் பக்கத்திற்கு எதிராக அமையவேண்டும்.

## 54. நூல்தலைப்பு

நூலின் பெயர், நூலாக்குநர் மற்றும் பதிப்பாளர் குறிப்புகள் கொண்ட பகுதி நூல்தலைப்புப் பக்கம் (Title page) எனப்படும். இது நூல்குறிப்புப்பக்கத்திற்கு எதிராக நூலின் வலப்பக்கம் இருக்கவேண்டும். குறிப்பிட்ட நூல் ஒரு வரிசையால் அமையு

மானால் அக்குறிப்பு தலைப்பான இடபக்க முதல் வரியாக அமைக்க வேண்டும். நூல் திருத்திய பதிப்பாக வந்தால் பதிப்புக் குறிப்பு நூல் தலைப்புக்குக் கீழே சிறிய எழுத்தில் அமைய வேண்டும். தலைப்புச் சிறப்புக் குறித்து அதன் ஆங்கிலப் பெயரும் கொடுக்கலாம். ஆக்குநரின் படிப்புத்தகுதி பெயருக்குக் கீழே ஆங்கிலத்தில் அமைப்பது சிறப்பு. பதிப்பாளர் பெயரின் கீழே தெளிவாக முகவரி இருக்கவேண்டும்.

இதுபற்றி இந்தியத்தர நிருணயக் கழகம் வெளியிட்டுள்ள தலைப்புத் தாள் அமைப்புத்தரம் (IS: 792-1956 Title Page and back of the title page of a Book) கருதத்தக்கதாகும்

## 55. உரிமையுரை

தலைப்புப் பக்கத்திற்கு பின் உரிமையுரையும் நூல்பதிப்பு ஆண்டும் பதிப்பாளர் முதன்மை அலுவலகம் மற்றும் இவைகள் முகவரியும் அமைந்து வருவது மரபு.

பலகாலம் அரும்பாடுபட்டு வெளியிடப்படும் ஆராய்ச்சி நூல்களின் பகுதிகளை எத்தர் சிலர் திருடுவதைத் (Plagiarism) தடுக்க உரிமைக்குறிப்பு – எச்சரிக்கைக் குறிப்பு - பின் வருமாறு அமைப்பது மரபாகி வருகிறது இதன் குறிப்பாவது.

© (Name of the Copyright owner)

All Right Reserved· No part of this publication may be produced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying recording or otherwire with out the priort permission of the Copyright owner (Name).

இந்த உரிமை எச்சரிக்கையை மீறுபவர்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உதவியாக நூலை தில்லியில் உள்ள உரிமை பதிவுப்பதிவாளர் (Registrar of Copyright).
அலுவலகத்தில் உரிமைப் பதிவுச் சட்டப் பிரகாரம் (Copyright Act of 1957) பதிவு செய்து கொள்ளலாம். இம்முறையில் இது வரை 12000 இலக்கிய முயற்சிகள் பதிவாகியுள்ளன.

இந்த உரிமையுரையை மீறி பதிப்பாளர் நூலாக்கியோருக்கு உரிய தொகையை காசோலை/வரைவோலை/ரொக்க முறையில் கொடுத்து இரசீது பெறவில்லையானாலும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து உரிமைப் பணம் பெறலாம்.

உரிமையுரைப் பக்கத்தைத் தொடர்ந்து சிலநூல்களில் தனிப்பக்கத்தில் படையல் உரை (Dedication)யும் காணலாம்.

## 56. அணிந்துரை

நூலை அறிமுகம் செய்யும் முறையில் நிறுவனத் தலைவர், நூல்தொடர்புதுறை சிறப்பினர், ஆளவந்தார் முதலியோரின் குறிப்புகள் அணிந்துரை (Foreword) என்ற பெயரில் அமைவது மரபு. இதில் குறிப்பிட்ட நூலின் சிறப்பு, நூலாக்குநரின் முயற்சி, நூற்பயன் முதலியன சுருக்கமாகச் சொல்லப்பட வேண்டும்.

## 57. முன்னுரை/பதிப்புரை

இப்பகுதியில் மூலநூலாயின் ஆக்குநர் குறிப்பு முன்னுரை (Introduction) என்ற பெயரிலும், பதிப்பு நூலாயின் பதிப்பாசிரியர் குறிப்பு பதிப்புரை (Editor's Note) என்ற பெயரிலும் நூல் நுவல் பொருள், அமைப்புப் போக்கு, நூல் பயன், நன்றியுரை கொண்டு அமையும்.

பதிப்புரையின்கீழ் சில சமயம் பொதுப் பதிப்புரை என்ற பெயரில் நிறுவனத்தலைவர் பதிப்புரைக் குறிப்பும் குறிப்பிட்ட நூலின் பதிப்பாளர் குறிப்பு பதிப்புரை என்ற பெயரிலும் வெளியாவதும் உண்டு.

## 58. பிற

அடுத்து அட்டவணைப் பட்டிகள் (List of Tables), விளக்கப்படங்கள் (List of Illustrations), சுருக்கக் குறிப்புகள் (List of Abbreviations), குறியீட்டுக் குறிப்புகள் (List of Symbols etc) பிழைத் திருத்தம் (Addenda or Corrigenda) முதலியன அமைக்கப்பட வேண்டும்.

தற்போது அவசரத்தைக் காரணமாகக் கொண்டு, அதிக வேலையைச் சாக்காகச் சொல்லி, மெய்ப்படிப் பார்ப்பவர் மீது

பழி சுமத்தி பிழைகள் கொண்டு நூல்வருவது தடுக்கப்பட வேண்டும். இதையும் மீறி பிழைகள் நேருமாயின் அதை கதை தொகுத்து பக்கவாரியாக பொருள் அடக்கத்திற்கு முன்னால் கொடுக்கவேண்டும். அப்படி அமைத்தால்தான் வாசகர் முதலி லேயே இதைக் கவனித்துத் திருத்திப் படிக்க ஏதுவாகும்.

### 59. பொருள் அடக்கம்

நூல் அமைப்பு ஓட்டத்தில் அமைந்துள்ள தலைப்புகளை - பகுதி, பகுதிப்பிரிவு, பிரிவுப்பகுத்தி தலைப்புகளை – சுருக்க மாகக் கொடுக்கும் பகுதி பொருள் அடக்கம்(Contents) எனப் படும். இப்படிக் கொடுக்கும் தலைப்புகளுக்கு எதிராக பக்கங் களும் கொடுப்பது மரபு.

சில நூல்களில் இறுதியில் சொல்லடைவு இல்லாத நிலையில் வாசகருக்கும் உதவும் முறையில் நூலோட்டுத்தில் வரும் எல்லாத் தலைப்புகளையும் முழுமையாகத் தருவதும் ஒரு மரபு.

வே. தில்லைநாயகம் எழுதிய குறிப்பேடு மூன்றாம் பதிப்பு (1963) இம்முறையில் 1009 தலைப்புகளில் 6 பக்கங்களில் தந்துள்ளார். மேலும் சொற்குறிப்பு என்ற தலைப்பில் இத் தலைப்புகளை அகரவரிசையில் அமைத்து சொல்லுக்கு எதிரே அச்சொல் வரும் பக்கத்தையும் குறிப்பிட்டுள்ளது காணத்தக்கது.

## 6. வெளி அடைவு நெறி

### 61. பொருள்

நூற்பொருள் தயாரானபிறகு, பின் அடைவுகள் இணைத்த பிறகு, முன் அடைவுகள்–அணைத்தபிறகு இவைகளை பிணைக் கும் மேல் அடைவுகள்-நமக்கு எளிதாகத் தென்படும் மேலட்டை கூடி, மேலட்டை, நூல்அட்டை, அட்டையையும் நூலையும் இணைக்கும் இணைப்புதான் முதலியவைகளை-வெளிஅடைவு களாகக் கொள்ளலாம். கொள்ளவேண்டும்.

### 62. பத்தை / அட்டை

ஓலைச் சுவடிகளைக் கட்டி வைக்க பாதுகாக்க மூங்கில் பத்தைகளை பிறபலகைகளை பயன்படுத்தியது போல அச்சிட்ட

காகிதத் தொகுப்பைப் பாதுகாக்க அட்டை கெட்டியான அட்டை இயந்திரத்தால் அழுத்தித் தயாரிக்கப்பட்ட அட்டை (Cover) உபயோகப்படுத்தப்படவேண்டும். முதலில் இது வெறும் அட்டையாக—நூல்பெயர் தாங்கிய அட்டையாக—மட்டும் இருந்தது. பிறகு இது வழுவழுப்பான ஒரு வண்ணம் கொண்டதாக, பிறகு பல வண்ணம் கொண்டதாக மாறியது; மாற்றியமைக்கப்பட்டது.

## 63. அட்டை உறை

காலப்போக்கில் அட்டைக்குப் பாதுகாப்பாக ஒரு உறை Jacket) அட்டையில் தூசுதும்புபடாது பாதுகாக்கும் தூசு நூலக்கும் உறையாக (Dust Jacket)ஒரு காகிதம் தயாரித்து மாட்டப்பட்டது. பிறகு இதுவே வண்ண அட்டையாக, பல வண்ண அட்டையாக, இன்று நாம் காணும் கண்ணைக்கவரும் அட்டையாக மாறியது. இது நான்கு பகுதிகளாக அட்டையை மூடி உள் மடியும் பகுதியாக, 2 நூலின் மேலே தெரியும் முன் பகுதியாக—நூலின் பெயர் மற்றும் நூலாக்கியோர் பெயரும் கொண்ட பகுதியாக, 3 நூல் பெயரும் பதிப்பாளர் குறியீடு கொண்ட முதுகுப் பகுதியாக, 4 ஆசிரியர் குறிப்பு அல்லது நூற் குறிப்புக் கொண்ட பகுதியாக வளர்ந்துவிட்டது.

சரியாகச் சொன்னால் இந்த மேலுறை செலவு பிடிக்கும் மேலுறை—பொருள் பொதிந்து அமைய வேண்டும். வே. தில்லைநாயகம் எழுதிய இந்திய நூலக இயக்கம், நூலக முன்னோடிகள் அறிவியல் என்றால் என்ன முதலிய நூல்களின் அட்டை உறை கருதத்தக்கது கருத்துக்காக.

## 64. உறை மடிப்பு

மேலுறை நூலோடு சேர்ந்து இருப்பதற்காக முன்னும் பின்னும் மடித்து விடப்பட்டது. முதலில் இது வெறும் மடிப்பாக மட்டும் இருந்தது. இன்று அடி படிப்புத்தகும். முன் மடிப்பு ஆசிரியர் குறிப்பும் பின் குறிப்பு நூற் குறிப்பும் தருவதாக வளர்ந்துள்ளது. சில சமயம் நூல் விமர்சனக் குறிப்பாகவும், அமைகிறது. இது ஆங்கிலத்தில் Blurb அல்லது Puff எனப்படும்.

## 65. உறைக் காப்பு

நூல் அட்டைக்குக் காப்பாக, வந்த மேலுறைக்குக் காப்பாக, அழகுக்காக, வழவழப்பாக பிளா அடிக் கூடு—ஒளி ஊடுருவும்

கூராய்-ஒன்று மாட்டப்பட்டது. இது தொடர்ந்து நூலோடு இருப்பது குறைந்தது இதனையும் காரணமாக இதற்கு மாறாக பிளா செடிகில் ஒரு கூடறான மெல்லிய தாள் இப்போது உறைக் காப்பாக ஒட்டப்பட்டு வழவழப்பாக பளபளப்பாக கவர்ச்சியாகத் திகழ்கிறது. பெரும்பாலான நூல்களில் இது மேலுறையை விரைப்பாகவும், தட்பவெப்பத்தால் பாதிப்பைத் தடுக்கும் காப்பாகவும் அமைகிறது.

## 66. இணைப்புத்தாள்

இந்த மேலுறையையும் நூலட்டையையும் நூலுடன் பிணைத்து வைக்கும் தாள்-ஒட்டப்படும்-தாள் நூலால் தைக்கப் படும் தாள்-இணைப்புத்தாள் எனப்படும் இது நூலக மொழியில் End paper என்னும் வழக்கில் Side paper என்றும் அழைக்கப் படுகிறது. இது பொதுவாக கெட்டியான தாளாக நூல்-தலைப் புக்கு பாதுகாப்பாக-அமைக்கப்பட்டது வெள்ளை நிறத்தில்

## 67. படத்தாள்

இந்த சாதாரண வெள்ளைத்தாள் காலப்போக்கில் வண்ணத் தாளாக, படத்தாளாக, மாற்றம் பெற்று விட்டது. இது நன்றாகப்படவே மேலும் சிறிது முன்னேற்றம் வந்தது.

அடுத்த கட்டத்தில் இது பொருள் பொதிந்த வண்ணப் படமாக, மேலுறையோடு ஒப்பிடும் படியாக போட்டியிடுவதாக அமைய ஆரம்பித்து விட்டது.

எடுத்துக்காட்டாகச் சொன்னால் கட்டுரையாளரின் இந்திய அரசமைப்பு என்ற நூலின் இணைப்புத்தாளில் பலவண்ணங்களில் நடுவில் இந்தியமாநிலங்களின் பிரிவும், அதைச் சுற்றி 33 கட்டங்களில் ஒவ்வொரு மாநிலத்தின் பெயர், தலைநகரம், பரப்பளவு, மக்கள் தொகை, படிப்பறிவு விழுக்காடு, தலைக்கு வருமானம் முதலியவைகளைக் கொண்டு வித்தியாசமாக அமைந்திருப்பது—அமைக்கப்பட்டிருப்பது—கருதத்தக்கது,

## 68. காகித உறை

கால விரைவு, கருத்து மாற்றம், காசுக்கணக்கு முதலியன இப்போது நூலின் கெட்டி அட்டை, அட்டை உறை, உறை

மடிப்பு முதலியவைகளை உதறித்தள்ளிவிட்டு, கெட்டி யான காகிதத்தில் வண்ண அச்சுடன் ஒட்டிய பிளாஸ்டிக் ஓடுடன் முன்னேறி வருவது காண்கிறோம்.

### 69. ஒருங்கிணைப்பு

இப்படி காலத்திற்கேற்ப, கருத்துமாற்றத்திற்கேற்ப வளர்ந்து வரும் மேலடைப்புப்பகுதிகளை கையாள வசதியாக கருத்து வளர்க்கும் பயன்களை கொண்ட, நூல்பொருள் விளக்கும் இணைப்புக்கொண்ட சாதனமாக மாற்றமுன்வரவேண்டும் நாம்.

## 7. அச்சு நெறி

### 71. பொருள்

கருத்தில் இருந்து, கருத்தையும் அவைகளில் இருந்து நூலை தயாரித்தபிறகு, முன் அமைவு, பின் அமைவு, வெளி அமைவு, முதலியவைகளை இணைத்தபிறகு உருவாகிவிட்ட கையை முத்துப்படியை கவர்ச்சியாக, கையாள வசதியாக, வாசிப்புக்கு ஏற்றதாக மாற்றுவது அச்சுநெறி என்பதைக் கருத்தில் கொண்டு மேல் செல்ல வேண்டும் படிப்படியாக.

### 72. கையாளவசதி

அச்சுநெறியின் முதற்படி நூல்கையாளவசதி உடையதாக ஆக்குவதாகும். எனவே ஒவ்வொரு நூலும் நீளம், அகலம் பருமன் என்ற மூவளவுரு (cuboid) கொண்டதாக இருக்க வேண்டும். இம்முறையில் நீளம் அகலம் பருமன் முறையே 15:10:2 என்ற விகிதத்தில் இருக்கவேண்டும் 25 சென்டி மீட்டருக்கு உள்ளான நீளமும் நீளத்தில் 80 விழுக்காடு அகலமும் 15 விழுக்காடு பருமனும் 1.5 கிலோ கிராமுக்கு அதிக மாகாத எடையும் கொண்டிருக்க வேண்டும்.

### 73. காகிதம்

நூலின் கையாளும் வசதி, அது அச்சடிக்கப்படும் காகிதத்தைப் பொறுத்ததாகும். எனவே இத்தகு காகிதம் இன்றையத் தேவைக்கு ஏற்ப அச்சடித்தால் ஊறாததாக

அடுத்தபக்கம் தெரியாததாக, வெண்மையாக, விரைவில் கெட்டுப் போகாததாக, வளவளப்பானதாக இயந்திரத்தயாரிப்பில் உருவானதாக இருக்கவேண்டும்.

பலரும் படிக்கும் நூல் செய்தித்தாள்கள் அச்சடிக்கும் காகிதத்தில் (Newsprint paper) கையால் தயாரிக்கப்படும் காகிதத்தில் (Hand made paper) அச்சிடக்கூடாது என்பது நினைவில் கொள்ளவேண்டும்.

## 74. அளவு

இத்தகு காகிதம் இன்று பல்வேறு அளவுகளில் நூல் அச்சிடுவதற்கென்றே தயாரிக்கப்பட்டு கிடைக்கிறது. இவற்றின் அளவுகளை அங்குலத்தில் (Inches) $\frac{1}{8}$ (Octavo) அமைப்பில் அறியலாம் அடுத்து.

Pott $6\frac{1}{4} \times 4$

Foolscap $6\frac{3}{4} \times 4\frac{1}{4}$

Crown $7\frac{1}{2} \times 5$

Large crown $8\frac{1}{8} \times 5\frac{3}{8}$

Demy $8\frac{3}{4} \times 5\frac{1}{2}$

Medium $9\frac{1}{2} \times 6$

Royal $10 \times 6\frac{1}{4}$

Super Royal $10\frac{1}{4} \times 6\frac{3}{4}$

Imperial $11 \times 7\frac{1}{2}$

காகித அளவிற்கு ஏற்ப அதன் எடை மாறுபடும் ஒவ்வொரு உற்பத்தியரும் தரம் கணித்து பெயர் வைத்துள்ளனர்.

பொதுவாக நூலகத்தில் கிரவுன் மற்றும் டெம்மி அளவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

## 75. வாசிப்புக்கு ஏற்பு

நூலை எடுத்தவுடன் அதன் எழுத்துகள் அழகாக, எடுப்பாக, கண்ணை உறுத்தயில் படிக்கத் தூண்டும் வகையில் வாசிப்புக்கேற்றதாக (Readability) அமைக்க வேண்டும்.

ஒவ்வொரு பக்கமும் வெள்ளையும் கருப்பும் தக்க விதத்தில் இருக்க வேண்டும். பொதுவாக அச்சு கருப்பு நிறத்தில் இருப்பதே கண்ணுக்கு ஏற்பு. வண்ண அச்சு ஏதோ ஓரிரு இடங்களிலே அழகுக்கு வரலாமே தவிர நூல் முழுமைக்கும் பயன்படுத்தக் கூடாது.

## 76. புள்ளி அமைப்பு

இதற்கான முறையில் அச்சுப்புள்ளிகள் (Print points 10, 12, 14, 18, 24 என்று பயன்படுத்த வேண்டும். பொதுவாக நூலோட்டத்திற்கு 10 புள்ளிகளும் தலைப்புகளுக்கு ஏற்ப பிற புள்ளிகளும் பயன்படுத்த வேண்டும். நூலோட்டம், பாட்டமைப்பு, அடிக்குறிப்பு மேற்கோள் விளக்கம் முதலிய வேறுபாடு காட்ட தக்க மாறுபட்ட அமைப்புள்ள போல்டு, இடலிக்சு முத்து - புள்ளிகளை உபயோகிக்கலாம்.

## 77. வரி அமைப்பு

நூலின் அச்சுவரி அமைப்பு தக்க இடைவெளி கொண்டு இருக்கவேண்டும். பொதுவாக டெம்மி அளவில் 40 வரிகளும் கிரவுன் அளவில் 35 வரிகளும் அமையலாம். இதற்கான அச்சு அளவு டெம்மியில் 21 × 14 செமீரும் கிரவுனில் 15 × 9.5 செமீரும் அமையும்.

## 78. சொல் அமைப்பு

வரிகளுக்கு இடையே ஒரே சீராக இடைவெளி அமைப்பது போல, சொற்களுக்கு இடையே ஒரே சீராக இடைவெளி அமைப்பது அவசியம். சில பக்கங்களில் இது சரியாக அமையாத காரணத்தால் நதி ஓட்டம் (Rivery) போல இடைவெளி அமைந்து விடுவது இயற்கை. இது தவிர்க்கப்பட வேண்டும். அச்சில் சொற்பிரிப்பு அவசியமான போது சீராகப் பிரித்து அமைக்க வேண்டும். இதில் தவறு வருமாயின் மெய்ப்புப் பார்ப்பவர் சரி செய்ய வேண்டும்.

## 79. நூலோரம்

ஒவ்வொரு நூலும் நல்ல நூல் ஓரம் - வரந்தை (margin) கொண்டு இருக்கும் போது பார்க்க எடுப்பாய் இருக்கும். மேலும் நூல் மறுகட்டுக்குப் போய் வரும்போது எழுத்துகள் வெட்டுப்படாமல், முதுகு தைக்கப்படாமல் முறையாக இருக்க ஏதுவாகும்.

பொதுவாக முதுகு (Back), தலைப் பக்கம் (Head), முகம் (Fore egde) மற்றும் வால் (Tail) பகுதிகள் முறையே 4:5:6:7 விகிதத்தில் இருப்பது அவசியம்.

# 8. கட்டுநெறி

## 81. பொருள்

எந்த ஒரு பொருளையும், சிறப்பாக நூலையும் ஒரு வரையறைக்கு உட்படுத்தி கட்டுக்கட்டி வைத்தால் தான் அழகாக எடுப்பாக இருக்கும். பொதுவாக இம்முறையில் கட்டு (Binding in its various depress) நூல் அமைப்புக்கு, பயன்பாட்டுக்கு, காப்புக்கு, அழகுக்கு, அடக்கத்திற்கு அனுசரணையாய் அமைந்தது.

## 82. சுருணை

ஓலையிலே எழுதிய காலம் மாறி, காகிதத்தில் எழுத ஆரம்பித்த போது பாதுகாப்புக்கு அது சுருட்டப்பட்ட சுருணை (Volume) யாக வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே நூல் இன்று வால்யூம் (Volume) என்று குறிப்பிடப்படுகிறது.

## 83. நூல்கட்டு

இது எடுக்க, பயன்படுத்த, திரும்பி சுருட்டி வைக்க சிரமமாய் இருந்தது. இதற்கு மாற்றாக எழுதப்பட்ட காகிதங்கள் ஒரே சீராக அடுக்கப்பட்டு முதுகுப் பக்கம் தைத்து வைக்கப்பட்டது, இது குத்துக்கட்டு (Stabbing) எனப்பட்டது.

## 84. மடிப்புக் கட்டு

காகித உற்பத்தி முன்னேறியபோது அச்சுக்கலை வளர்ந்த போது பெரிய காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு அவை மடிக்கப்பட்டு 4, 8 மற்றும் 16 பக்க மடிப்பாக மாற்றப்பட்டது. இம் மடிப்புகளில் துளையிட்டு நூல் கட்டப்பட்டது. இது மடிப்புக் கட்டு (Section Stitching) எனப் பெயர் பெற்றது.

## 85. திறப்புக் கட்டு

மடிப்புக்கட்டு தொடர்ந்துப் பயன்படும் போது அதிகமாக பயன்பட்ட பக்கங்களைக் கொண்ட மடிப்பு நூல்குத்து இடைவெளியில் அசைவு ஏற்பட்டு கட்டு முன் பின்னாகக் காட்சி அளித்தது.

இதை மாற்றும் முகப்பில் திறப்புக் கட்டு (Open binding) பயன்பாட்டிற்கு வந்தது. இம்முறையில் மடிப்புத் தையலின் பின்னால் நாடாத்துணி இரண்டு மூன்று இடங்களில் வைத்து தைக்கப்படும். பிறகு முதுகில் வச்சிரபசை தடவிக் காய வைத்து முதுகுப் பக்கத்தை வளைவாகத் தட்டி இணைப்பு தாள் மூலம் நூலட்டை கட்டு முடிக்கப்படும். இத்தகு நூல் கட்டு உறுதியாக நூலை இட்டம் போல் மடித்துப் பிடிக்கும் அளவுக்கு சாட வசதியாக அமைந்தது.

## 86. தையல் கட்டு

நூல் உற்பத்தி அதிகமாயின போது விரைவான போது ஆர அமர நூல் கட்டுவது இயலாத நிலை ஏற்பட்டது. வேலையைக் சுளுவாக்க தையல் இயந்திரம் மூலம் பருமன் குறைவான நூல்கள் தையல் போடப்பட்டன வெளிநாட்டில்.

## 87. கம்பிக் கட்டு

இதுவும் தாமதமாகும் என்ற நிலையில் நூலின் மூன்று பக்கங்களில் மேல்-நடு-கீழ்ப்பகுதிகளில் கம்பிக்கட்டு (Stapling) பயன்பாட்டுக்கு வந்தது. இந்தக் கம்பிக் கட்டில் கம்பியின் தரம் குறைந்த போது துருப்பிடித்தது. இதை மாற்ற செம்பு கம்பி, துரு வேறாக் கம்பி புழக்கத்திற்கு வந்தது.

## 88. ஒட்டுக் கட்டு

மலிவுப் பதிப்பு வரும் போது முதுகுப் பக்கத்தை கெட்டி யான பசையால் ஒட்டிக் கட்டும் முறை வந்தது. ஒப்பிய கட்டாகியது. எனினும் இத்தகு கட்டின பக்கங்கள் விரைவில் தனியாக வந்து விடும். தனியார் பயனுக்கு இக்கட்டு பரவா யில்லை. நிறுவன்ங்களுக்கு நூலகங்களுக்கு மாற்று தேவைப் பட்டது.

## 89. நூலகக் கட்டு

தொடர்ந்த பயனுக்கு நல்ல பயனுக்கு நூலகக்கட்டு — நூலகத்தில் கையாளப்படும் நூலகக்கட்டு (Library Binding) தேவைப்பட்டது. இதில் நல்ல நூலைக் கொண்டு முதுகுப் பக்கம் துணரி இணைப்புச் செய்யப்பட்டு நல்ல வலுவான

அட்டை சேர்க்கப்பட்டு உறுதியான நூல்கட்டு பயன்பாட்டிற்கு வந்தது.

இதற்கு இந்திய தரநிருணயக்கழகம் தந்துள்ள நூலகக் கட்டுத்தரம் ((IS: 3050—1965 Code of Practice for Reinforced Binding of Library Books and periodicals) கருதத்தக்கது.

# 9. பயன்நெறி

## 91. பொருள்

உலகத்துப் பொருள் ஒவ்வொன்றும் பயன்படுவதற்கே என்கிறது பயனீட்டுவாதம் (Utilitarian) ஆளுக்கு ஒரு நூல் என்கிறது நூலகப் பஞ்சசீலத்தின் இரண்டாவது சீலம் எனவே முதலில் படித்த எட்டு நெறிகளையும் இணைத்து பிணைத்து உருவாகிய நூல் ஒவ்வொன்றும் யாராருக்கு உறுபடிப்பாளருக்குப் பயன்படவேண்டும். இதை நடைமுறையாக்குவது எங்ஙனம்?

## 92. தனிவிற்பனை

நூல் அச்சிடுபவர்கள் – நூலாக்குநர் மற்றும் நூல் வெளியிடுநர் – முதலில் தனியாக விற்பனை செய்து வந்தனர். நூல் வாங்குநர் தேடிச் சென்று விற்பனை செய்ய வேண்டி இருந்தது நூல் விமர்சனம் வந்த சமயம் சில நூல்கள் விற்பனை ஆயின. பொதுவாக முன்னெல்லாம் 500 முதல் 1000 படிகளே அச்சாகி விற்பனை ஆயின. இதற்கு ஏறத்தாழ 3 முதல் 5 ஆண்டுகள் ஆயின.

## 93. கடைவிற்பனை

பிறகு அதிக நூல் வெளியிடும் காலம் வந்தபோது பெரும்பாலும் நூலாக்குகர். இருப்பிடமே கடையாகவும், சிலசமயம் தனிக்கடை அமைத்தும் நூல் விற்பனை செய்யப்பட்டது. இத்துடன் இணைப்புக்கு பிறர் நூல்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டன.

## 94. முகவர் விற்பனை

நூல் வெளியிட முதலீடு செய்யாமல், நூல் வெளியிட்டவர்களிடம் பெற்று விற்று அதில் வரும் தொகையில் ஒரு சிறு

பகுதியை கழிவாக எடுத்துக் கொள்ளும் முகவர் விற்பனைமுறை வந்தது. இந்நிலையில் கழிவுத் தொகை காண்பதில் தான் முனைப்பாய் இருப்பர் முகவர்.

## 95. கல்விநிலைய விற்பனை

முன்வந்த மூன்றுநிலையிலும் விற்பனை மெதுவாகத்தான் நடக்கும். கல்வி வளர்ந்த போது கல்வி நிறுவனங்கள் அதிக மாகியபோது கல்வி நிலையங்களுக்கு விற்கும்போக்கு முன்னே றியது இங்கு பெரும்பாலும் பாடப்புத்தக விற்பனைதான் அதிகம் பொதுநூல்கள் போவது குறைவு.

## 96. நூலக விற்பனை

இந்தியாவில் முதன்முதலாக 1948 இல் சென்னையில் பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. நூல் விற்பனை மெல்ல முன்னேறி யது. தமிழ்நாட்டில் பிறமாநிலங்களில் முன்னேற்றம் புலப்பட் டது.

1972—82இல் நூல் விற்பனையில் ஒரு பொற்காலம் - பொது நூலகத்துறை முனையினால் ஏற்பட்ட பொற்காலம் - முதல் பொது நூலக இயக்குநர் தில்லைநாயகம் முயற்சியால் ஏறத்தாழ 10,000 தலைப்புகளில் 25 இலட்சம் பிரதிகள் ரூ 1.5 கோடி மதிப்புக்கு நூலகத்தில் நூற்கள் விற்ற பொற்காலம் நடந்தது.

இக்காலத்தில் என்றுமில்லாத அளவுக்கு தமிழ் நூல்கள் புதிய வடிவங்களில், வண்ணங்களில் வனப்புகளில் வாழ்வு பெற்றனர். பதிப்பகங்கள் நிலைபெற்றன. வெளியீட்டுத்துறைச் சார்ந்த பல துறைத் தொழில்கள் செழித்தன.

இப்பொற்காலம் போனது போனதுதான்; இனி அது திரும் பாது; திரும்பும் அறிகுறிகள் அணுவளவும் தெரியவில்லை இதற்கு மாற்று?

## 97. ஒப்பந்த விற்பனை

இந்நிலையில் ஆராய்ச்சி நூல்கள் வெளியீடும் சரசுவதி மகால் போன்ற நிறுவனங்கள் தனியார் முயற்சியுடன் போட்டி யிட முடியாது; கூடாது; தேவையில்லை அப்படியானால் என்ன செய்வது?

பொற்காலத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ் நாட்டுப் பாடப் புத்தக நிறுவனம், தேசிய நூல் நிறுவனம், சாகித்ய அகாடெமி, இந்திய அரசாக வெளியீட்டு நிறுவனம், இராசாரம் நூலக அறநிறுவனம் முதலியவைகளோடு பொது நூலகத்துறை தொடர்பு கொண்டு நூல்களை வாங்கிக்குவித்தது, எழுதிய —எழுதா ஒப்பந்தங்கள் மூலம் இம்முயற்சி இப்போது இல்லை.

இதற்கு மறுதலையாகச் சரசுவதி மகால் நூலகம் பொது நூலகத்துறை கல்லூரிக் கல்வித்துறை, மேனிலைக்கல்வித்துறை, பல்கலைக்கழகங்கள் முதலியவைகளோடு நேரடித் தொடர்பு கொண்டு நூல்கள் அச்சானதும் நூல்களை அனுப்பி வைக்கும் முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். தற்போதைய சரசுவதி மகால் நூலக அமைப்பு இதற்கு உதவியாகும்.

## 98. வெளிநாட்டு விற்பனை

நூல் வெளியிட்டால் தமிழ் நாட்டில்தான் பொது நூலகத் துறைக்குத்தான், கல்வி நிறுவனங்களுக்குத்தான் நூல்கள் விற்க இயலும் என்ற எண்ணம் மாற வேண்டும்.

தமிழ் பேசும் இடமெல்லாம்—சிரிலங்கா, மலேசியா, மத்திய கிழக்கு ஆசியா, கடல்படு நாடுகளிலும் நூல்கள் விற்கலாம் விற்க முடியும் முயலவேண்டும் அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கு தில்லியிலுள்ள நூல் வாங்கும் நிறுவனம் மூலம் முயலவேண்டும்.

## 99. முயற்சி விற்பனை

ஆட்டுவித்தால் ஆடாதார் அவனியிலே யாருமில்லை;
நாட்டுக்கு ழைப்பதற்கே நல்லபணி யாளரானோம்;
ஒழுக்கமெனும் காகிதத்தில் உறுகல்வி அச்சேற்று
உழைப்பென்னும் காட்டிலே உருவான புத்தகம்யாது!

நாட்டார் படிப்பதற்கு நாம் திறந்த நூலானோம்;
பாட்டார் பனுவலுக்கும் பாடும் பொருளானோம்;
ஊழியம் செய்வதினால் ஊரறிந்த ஆளானோம்;
ஊரறிந்த காரணத்தால் ஓயாது உழைக்கின்றோம்.

என்று பாடும்படியாகக் கருத்தாலே கவர்ச்சி பெறும் நூல்களும் நூலால் உலகளக்கும் நுண்ணறிவாளர்களும் நூல்களையும் நுண்ணறிவாளர்களையும் பின்னின்று இயக்கும் நூலகர்களும் நூலக இயக்குநரும் முயன்றல் முடியும் ஆளுக்கு ஒரு நூல் தர! முயல்வோமா?

# பதிப்பு நெறிமுறை

**(கழக இலக்கியச் செம்மல், இரா. இளங்குமரன், மதுரை).**

## 41. படியெடுப்புப் பணி:

ஏட்டுச் சுவடியில் இருந்து படியெடுத்தல் ஒரு பெரும் பணி; அரும்பணியும் அது.

1. நூல் இயற்றியவர் எழுதிய ஏட்டுச் சுவடியே, நம்கையில் கிட்டுவதில்லை. அவர் சுவடியைப் பார்த்து, அவர் மாணவர்களும் பிறர் பிறரும் படியெடுத்திருப்பர். கூலிக்குப் படியெடுப்போர் படியும் உண்டு! அப்படியைப் பார்த்துப் பிறர் படியெடுத்ததும் உண்டு. ஆதலால், படியெடுத்தவரின் தெளிவின்மை, மொழிப்புலமை இன்மை, கருத்து இன்மை என்பவற்றால் பிழைகள் ஏற்பட்டிருத்தலும், பாடவேறுபாடு பட்டிருத்தலும் கண்கூடு. எனவே, ஏட்டுச் சுவடியில் இருந்து படியெடுப்பவர் தெளிவுடனும், பொறுப்புணர்வுடனும் கடமை புரிதல் வேண்டும் என்பது வெளிப்படை.

2. ஒரு நூலுக்குச் சில பல சுவடிகள் கிடைப்பின் அவற்றை இருவர் ஒப்பிட்டுப் படித்தல் வேண்டும். அதற்கு முற்படச் செவ்விய படியென ஒன்றைத் தெரிந்தெடுத்து அதனை மூலப்படியாகக் கொண்டு மற்றைப்படிகளின் வழியே கிடைக்கும் பாடங்களைத் தொகுத்தமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. படியெடுத்த அளவில், பதிப்பாசிரியர் பொறுப்பில் தாள் படியை ஒப்படைத்தல் சாலாது. ஏட்டுப்படியொடு தாள் படியை ஒத்துப் படித்தலும், ஐயமுற்ற இடத்து மீண்டும் ஒப்பிட்டுப் பார்த்தலும், கட்டாயமாகச் செய்யத் தக்க பணிகளாம்.

## ஆ. பதிப்பாசியர் தேர்வு:

பதிப்புப்பணி சிறப்பாக நிறைவேறுதற்கு முதன்மையான ஒன்று, தக்க பதிப்பாசிரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் பணியை ஒப்படைத்தல்.

**தக்காரைத் தெரிதற் கூறு:**

1. சிறந்த மொழிப் புலமையாளராக இருத்தல்.
2. பதிப்பிடும் நூலுக்குறி துறையறிவு மிக்கோராக இருத்தல்.
3. பதிப்புத் துறையில் பட்டறிவுடையவராக இருத்தல்.
4. காலந்தவறாக் கடைப்பிடியுடையவராக இருத்தல்.

## இ. பதிப்புப்பணியின் அருமை:

**நூலாம் ஆசிரியர் பதிப்பாசிரியர்**

பதிப்புத்துறை மாளிகைக்குச் 'சுவர் எழுப்பிவர்' எனத் திரு. வி. க. வினால் பாராட்டப்படும் **சி. வை. தாமோதரனார்,** பதிப்பாசிரியர் குறித்துக் கூறும் செய்தி அறியத் தக்கது.

''இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர் என வகுத்த மூவகை ஆசிரியரொடு யான் பரிசோதனாசிரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன்மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடிய தொன்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டிய தென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன் தூக்கினாலன்றோ தெரியும் தலைச்சுமை?

பரிசோதகாசிரியர் படுங்கஷ்டமும் ஒரு அரிய பழைய நூலைச் சுத்தமனச் சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க் கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவித்தாலன்றி அறியப் படாப் பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது

இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக் கொண்டு என்கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரைக் கேட்டால் இந்நால்வகை ஆசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி'' என்று கலித்தொகைப் பதிப்புரையில் எழுதுகின்றார். இனிப் பதிப்பாசிரியர் தொடக்கப்பணி, பதிப்புப்பணி, கடைப்பிடி என்பன குறித்துக் காண்போம்.

## இ. பதிப்பாசிரியர் தொடக்கப்பணி:-

1. நூலை ஒருமுறைக்கு இருமுறை பொருள் விளங்கப் படித்து, நூற்பொருளை உள்வாங்கிக் கொள்ளுதல்.
2. நூற்பொருள், சிறப்புப்பெயர், வரலாற்றுக் குறிப்பு, சொல்லாட்சிவகை - இன்னவற்றை அடைவு செய்து கொள்ளுதல்.
3. நூற்பகுதியும், அந்நூற்பகுதிக்குத் தக்க அடிக்குறிப்பு விளக்கம், மேற்கோள் - ஆகியவையும் இடம் பெறும் வகையில் - பதிப்புப் படியெடுத்துக் கொள்ளுதல்.

## உ. பதிப்புப்பணி:-

1. பழஞ்சுவடிகள் - எத்துறை சார்ந்தன எனினும் - யாப்பு வழிப்பட்டவை யாகலின், நூலின் யாப்பமைதியை ஒழுங்கு படுத்திச், "சீரும் தளையும் சிதையாவண்ணம்'' பிரித்தல். அவ்வாறு பிரித்துக்காட்ட முடியாப்புணர்ப்புடைய தொடரை அடிக்குறிப்பில் பிரித்துக்காட்டுதல். புணர்ப்பைப் பிரித்தல் எவ்வகையிலும் பொருள் மயக்குக்கு இடந்தராவகையில் அமைதல்.

"கோதின் மாதவர் குழுவுடன் கூடக்
  கோல வானிழற் கீழறம் பகர
வேதஞ் செய்தவ ரெய்திய வின்ப
  மியானும் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்''

என்னும் சுந்தரர் நின்றியூர்த் தேவாரத்தில் (6) "வேதமும் ஏதமுமாய்'' 1923-இல் ஓர் ஆய்வுப் போரே நிகழ்ந்தது

'திருநான்மறை விளக்கம்' என்னும் சிறிய நூலின் அளவினும், நான் மடிதடியாய் மறுப்பு நூலும், அதற்கு இணையாய் "வித்துவப் பெரியா ரபிப்பிராயமும்" வெளிப்பட்டன. ஆதலால், 'சந்தி' எவ்வாறெல்லாம் 'சந்தியில்' நிறுத்த வல்லதென உணர்ந்து கடனாற்றல் வேண்டும்.

'முதற்றே' என்பதனை 'முதல்+தே' எனப்பிரித்தல், 'சாவா மருந்து' என்பதனைச் 'சாவாம் மருந்து', 'சாவாம் அருந்து' எனப் பிரித்தல் - இன்னவை உரையாளரும், ஆய்வாளரும் மேற் கொள்வனவேயன்றிப் பதிப்பாசிரியர் பதிப்புக் கடனன்றாம்.

2. பதிப்பிடும் நூலின் பாடல்கள் வேறு நூல்களில் உரை யாசிரியர்களால் எடுத்துக் காட்டப்பட்டிருக்குமானால் அப்பாடல் களால் அறிய வரும் பாடங்களைப், பிறிதோர் சுவடியில் கிடைத்த பாடம் போல் போற்றிப் பாட வேறுபாடென அடிக் குறிப்பில் காட்டுதல்.

எ-டு: யாப்பருங்கல விருத்தியுரையில் யாப்பருங்கலக் காரிகைச் செய்யுள்கள் விரவிக் கிடத்தல்.

தொல்காப்பிய உரைகளில் தொகையும் பாட்டும் பிறவும் பெருவரவாக இருத்தல்.

3. பதிக்கும் நூல் உரையொடு கூடியது எனின், உரை யாசிரியர் எடுத்துக்காட்டும் மேற்கோள் பாடல்களைக்கிடைக்கும் மூலநூல்களுடன் ஒப்பிட்டு ஆய்ந்து பாடவேறுபாடு குறித்தல். இது, பிற நூற்பதிப்பின் செப்பத்திற்குப் பெருந்துணையாக அமையும்.

எட்டு: புறத்திரட்டு என்னும் அரிய தொகை நூலால் பலப் பல நூல்களின் பாடல்களுக்குச் சிறந்த பாடங்கள் கிடைப்ப துடன், பிறநூல்களுக்குரிய விடுபாட்டுச் செய்யுள்களும் கிடைத் துள்ளன.

"அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவரிவரைத் ... ....
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி"

என்னும் ஆசாரக்கோவை 'சவலை வெண்பா' என விளக்க வுரையாரால் காட்டப்பட்டது. ஆனால், புறத் திரட்டில் இரண்டாம் அடி, 'நிகரில் குரவரிவ் வையர் - இவரிவரைத்' எனப் பாடம் உண்மை, செம்மையாக்குகின்றது.

4 பழைய உரையோ, குறிப்புரையோ கிடைக்கும் சுவடிப் பதிப்பு எனின், உரையால் மூலப்பாடம் திருந்துதற்குச் சிறந்த வாய்ப்பு உண்டு. பாடவேறுபாடு பலவாகக் கிடப்பின் அவற்றுள் தக்கபாடம் இன்னதெனத் தேர்ந்து கொள்வதற்கும் வாய்ப்பு உண்டு: (எ-டு)

சிலம்பு. அரங்கேற்று காதை 64, 65 ஆம் அடிகள்,
"இசையோன் பாடிய இசையின் இயற்கை
வந்தது வளர்த்து வருவ தொன்றி"

என்பன 'வந்தது வளர்த்து' என்பதற்கு அரும்பதவுரை, "பாடுகின்ற பண்களுக்குச் சுரம் குறைவுபடாமல் நிறுத்தி" என்பது வளர்த்து என்பது "குறைவுபடாமல்" என்னும் பொருளில் வருதல் தெளிவு. அடியார்க்கு நல்லார் உரையும் குறைவு படாமை' என்பதே.

சிலப்பதிகாரப் புகார்க் காண்டம் 1876-இல் சென்னை, மாநிலக் கல்லூரி முதன்மைத் தமிழாசிரியர் சீனிவாச ராகவரால் வெளியிடப்பட்டது. தி க. சுப்பராயரால் 1880-இல் புகார்க் காண்டம் உரையுடன் வெளிப்பட்டது. 1892 - இல் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதர் பதிப்பு அரும்பதவுரை, அடியார்க்கு நல்லாருரை ஆகியவற்றுடன் வெளிவந்தது. இம் முப்பதிப்புகளுக்கும் முன்னர் என்றி ஆல்பிரட்டு கிருட்டிணரால் 1869 பெப்ருவரி 18-இல் சிலப்பதிகாரம் சுவடியில் இருந்து தாளில் கைப்படியாக எடுத்து முடிக்கப்பட்டது. அதில் 'வளர்த்து' என்பது 'வழா அது' எனப் பாடமாக உள்ளது. இப்பாடமே உரையொடு பொருந்தி நடையிடுதல் தெளிவு.

மேலும் ஒன்று:

சிலம்பு அந்திமாலைச் சிறப்புச் செய்காதை 11,12 ஆம் அடிகள்,

"வலம்படு தானை மன்னர் இல்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரின்"

என்பன. இவ்வடிகளுக்கு அரும்பதவுரைக் குறிப்பு இல்லை. அடியார்க்கு நல்லார் உரை. "வெற்றிபொருந்திய தானை மன்னர் இல்லாத இடமறிந்து அவர் நிலமெல்லாம் கெடும்படி புதிதாக வந்துவிட்ட குறுநிலமன்னரைப் போல" என்பது. 'புலம்பட' என்பதற்கு 'நிலமெல்லாம் கெடும்படி' என்பதே உரையாதல் விளங்கும். இப் 'புலம்பட' என்பது 'புலங்கெடன்' என எ. ஆ. கி. படியில் உள்ளது. இஃது, உரையால் உண்மைப் பாடமாதல் தெளிவாகின்றது.

5. இனி, உரைகிடையாப் பகுதிக்கு அல்லது நூலுக்குப் பாடந் தெளிவு செய்தலிலும் நுணுகிய நோக்கு வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் வள்ளை வரிப்பாடல்கள் மூன்றுள. 'வள்ளை உலக்கைப்பாடல்' என்ற அளவில் அரும்பத உரை அமைகின்றது. அடியார்க்கு நல்லார் உரையோ கிடைத்திலது. மூலப்பாடந்தானே முழுப் பொருளாவது!

வள்ளை இரண்டாம் பாடல், பாண்டியனின் வேப்பந்தாரை விளம்புகின்றது. மூன்றாம் பாடல், சேரனின் பனந்தோட்டைப் பகர்கின்றது. சோழனின் 'ஆத்தி' அல்லது 'ஆர்' 'இல்லை. அது, முதற்பாடலில் இருந்திருக்க வேண்டும்!

முதற் பாடல் இருந்தும், அதில் 'ஆர்'இருந்தும் ஒரு சிறு தவற்றால் மறைந்துவிட்டது. "போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவில்" ஒன்று இளங்கோவடிகள் விடாமலே, விட்டதாகிவிட்டது!

இருபத்தைந்து சுவடிகளைக் கொண்டு பெரும்பேராசிரியர் உ. வே. சா. அவர்களால் பதிப்பிக்கப்பட்டது சிலம்பு. அவற்றில் கிட்டாத பாடம் பேராசிரியர் வையா புரியார்க்குக் கிடைத்த சுவடி ஒன்றில் கிட்டியது. அதனை அகராதி நினைவுகளில் வரைந்தார் (பக். 10). அவர் கண்டபாடம், எ. ஆ. கி. கையெழுத் துப்படியிலும் காணவாய்க்கின்றது.

"பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்" என்பது,
"பாவைமார் ஆரிரக்கும் பாடலே பாடல்"

என இருந்திருந்தியிருக்க வேண்டும் என்பதே அது. ஆனால், சிலம்பு மறுபதிப்பிலும் ஏறவில்லை; பிற பதிப்புகளிலும் ஏறவில்லை.

அம்மட்டோ! 'ஆரிரக்கும்' என்பது 'ஆரிக்கும்' என்று நுழைந்த பிழையால் உண்டாகிய மேற்பிழை உண்டு:

"ஆரித்தல் - ஒலித்தல். பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்" (சிலப். 29 வள்ளைப்) எனச் சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் இடம்பெற்று "இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்" என்னும் பழமொழியை மெய்ப்பித்துக்கொண்டு நிற்கின்றது!

6. இனி, ஒரு நூலின் புது வரவு அந்நூலின் அளவில் அமைவதன்று என்பதை எண்ணிப் பதிப்பாசிரியர் தம் பணியை வளமாக்குதல் வேண்டும். வளமாக்கும் வகை: நூலாசிரியரைப் பற்றிய செய்திகளைத் திரட்டித்தரின், புலவர் வரலாற்று வளத்துடன், நூல் வரலாற்று வளமும் ஆம்.

புரவலர் உளராயின் அவர் வரலாற்றுச் செய்தித் தொகுப்பு நாட்டியல் வளமாம்.

நூற்பொருள் நுணுக்கங்களைத் திரட்டித் தருதல் நூற் பொருட்டுறை வளமாம்.

நூல் அருஞ்சொற்களைத் தொகுத்து இடத்தொடும் அடைவு செய்யின், அகரமுதலி கலைக்களஞ்சிய வளங்களாம்.

நூலாசிரியர் காலப் பழக்க வழக்க ஒழுக்காறுகளை அடைவு செய்து தரின், குமுகாய இயல்வளமாம்.

சுவடிநிலை, படியெடுத்தோர் இன்ன குறிப்புகள் இடம் பெறுவித்தல் சுவடிப் பணியாளர்க்குச் செய்யும் நன்றிக் கடனாத லுடன், சுவடி வரலாற்றுக் கருவியுமாம்.

இத்தகு அடைவுகள், ஆய்வுத் துணையாய், ஆய்வாளர் களுக்குக் கருவிநூற் கொடையாய் அமைந்து, நூற்பரப்புநராம் பேற்றையும் பதிப்பாசிரியர்க்கு வழங்கும்.

ஓர் உறுதிப்பாடு:-

பதிப்பாசிரியன், மனச் சான்றொடு கூடிய ஓர் உறுதிப்பாடு கொண்டிருத்தல் வேண்டும். அது, எக் காரணியம் கொண்டும் மூலப் பாடத்தைச் சுவடித் துணை எதுவும் இல்லாமல், தக்க பாடமெனத் தெரிதலும் திருத்துதலும் செய்யாமை என்பதாம். மனம்போல் நூலில் கைவைப்பின், நூலொழுங்கென ஒன்றும் இல்லையாய் ஒழியும்!

## ௨௭. பதிப்புப்பணியின் பாடும் நிறைவும்

"தட்டா னிடத்தில் தங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கில் உள்ளதைக் காகிதத் தச்சில் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலப்பல நாளும் துயர்செய்யுமே"

என்பது வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் பாடல். ஆனால், செம்பதிப்பாக ஒருநூல் வெளிப்பட்டுப் பாராட்டுப் பெற்றால்,

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

எனப் பதிப்பாளன் மகிழ்வான் என்பதற்கு ஐயமில்லை!

நிறைவுரை

இங்குச் சுட்டப் பெற்ற பதிப்பு நெறிமுறைகள், புதியன அல்ல; பல்வேறு சிறந்த பதிப்பாளர்களாலும் மேற்கொள்ளப் பட்டுப் பதிப்புகளில் வெளிப்படக் காணப்படுவனவே இவற்றைத் திரட்டித் தந்த பணியே என் பணியாம்.

பதிப்பித்தர் போல்வார் பதிப்பிப்பார்; உள்ளம்
குதிப்பிப்பார்; கூடிக் குழைந்து.
"பதிப்பித்தார், தம்மைப் பதிப்பித்தார்; ஞாலம்
மதிப்பித்தார்; மாயாமல் நின்று!

---o---

பதிப்பாசிரியர்

# பதிப்பு முறை வளர்ச்சி


முனைவர் ச. மெய்யப்பன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்


### தொடக்க காலம்:-

தொடக்க காலத்தில் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டு, பெரிதும் உழைத்து நூல்களை வெளிக்கொணர்ந்தார்கள். தமிழ்நூல் வெளியீட்டிற்குச் செழுமையும் பெருமையும் சேர்த்தனர். டாக்டர் உ.வே. சா. வின் காலத்தைப் பதிப்புலகின் பொற்காலம் எனலாம். அய்யர் அவர்களின் பதிப்பு அடிச்சுவட்டில் பதிப்புமுறை வளர்ந்து வருகிறது. பரிணாம முறைப்படி பதிப்புத்துறை வளர்ச்சி குன்றியுள்ளது. அய்யர் அவர்களின் பதிப்பு, சமாஜப் பதிப்பு, மர்ரே பதிப்பு, கழகப்பதிப்பு என இனஞ் சுட்டிப் பிரித்தறிய முடிகிறது. ஒவ்வொரு பதிப்புக்கும் தனி அமைப்பு உண்டு. பதிப்பைப் பார்த்த அளவிலே பதிப்பை இனங்கண்டு கொள்ளலாம்.

கடந்த முப்பது ஆண்டுகளில் வெளிவந்த இலக்கிய இலக்கணப் பதிப்புகள் பிழை மலிந்த பதிப்புகளாக உள்ளன. அரிய ஆராய்ச்சி முன்னுரைகள் அமைவதில்லை. பிற்சேர்க்கைகளாகப் பொருள் அகரநிரல், சொல் அகரநிரல் அமைக்கப் பெறுவதில்லை. பதிப்பாசிரியர்கள் பொதுப்பதிப்பாசிரியர்கள் எனப் பெயர்கள் போட்டுக் கொள்வதில் காட்டும் ஆர்வத்தை, பதிப்புகள் செம்மையாக அமையவேண்டும் என்பதில் காட்டுவதில்லை.

### பதிப்பாசிரியர்களின் பொறுப்புகளும் கடமைகளும்:-

மூலநூலை நன்கு தேர்ந்தெடுத்துப் பல தேசப்பிரதிகளைச் சேகரித்து மூலப் பாடங்களை ஒப்பிட்டு நோக்குதல், சுவடிகளைச் சேகரிப்பதில் தனிக்கவனம் செலுத்தல், சோர்வடையாமல் பல இடங்களுக்கும் சென்று சுவடிகளைத் தொகுத்தல்

ஆகிய பணிகளில் கவனம் செலுத்த வேண்டும். மரபுவழிப் புலவர் குடும்பங்களில் கிடைக்கும் சுவடிகளை நம்பத்தகுந்தவையாகக் கொள்ளலாம். நல்ல சுவடிகளைத் தேர்ந்தெடுப்பதே பதிப்பின் நல்ல தொடக்கமாகும். பதிப்பாசிரியன் அறிவும் ஆற்றலும் புலமையும் இலக்கியப் பயிற்சியும் சிறந்த மூல ஏடுகளைத் தேர்ந்தெடுக்கப் பெரிதும் துணை செய்யும்.

## முன்னேற்பாடு:-

பதிப்பாசிரியர் ஏடுகளைத் தொகுத்தல், பாடபேதங்களை அறுதியிட்டு உறுதி செய்தல், அடிக்குறிப்புகள், மேற்கோள்களை வகைப்படுத்துதல், உடன்பணி செய்வதற்கு அறிவுநலம் சான்றவர்களை அமர்த்திக் கொள்ளுதல், ஆகிய பதிப்புக்கூறுகளை வகைப்படுத்திக் கொண்டு செம்பதிப்புக்கான முயற்சிகளைத் தொடங்கவேண்டும். நல்ல அச்சகங்களைத் தேர்தலும் மெய்ப்புகளைத் திருத்துவதற்கு அறிவுநலம் சான்றவர்களைத் தேர்தலும் முன்னேற்பாட்டு முயற்சிகளாகும்.

## பிழையற்ற பதிப்பு:-

பதிப்பாசிரியர் மிகுந்த கவனம் எடுத்து எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை வாராமல் காத்தல் வேண்டும். குறிப்பாக மெய்ப்பு திருத்துவோர் புலமைக் குறைவால், அக்கறையின்மையால் இந்நாளில் ஒரு நூலில் பல நூறு பிழைகள் மலியக் காண்கிறோம். இந்தத் தலைமுறையில் மெய்ப்பு திருத்துவதற்கு இளைஞர்களுக்குச் சரியான முறையில் பயிற்சியளிக்கப்படவில்லை. இனிவரும் தலைமுறைகளில் மெய்ப்பு திருத்துவோர் அரிதாகிவிடுவர் என்பது என் கருத்து. மெய்ப்பு திருத்துவதற்குப் புலமை நலமும் விழிப்புணர்வும் மொழித்திறனும் சோர்வறியாது உழைத்தற்குரிய விருப்பமும் மதிநலமும் வேண்டும். எழுத்துப் பிழைகளால் எண்ணற்ற கருத்துப்பிழைகள் தோன்ற வாய்ப்புண்டு. இன்று வெளிவரும் புத்தகங்களில் பிழையில்லாத நூல்களைக் காண்பது முயற்கொம்பாக உள்ளது. அச்சுப்பிழை மிகுதியால் படிப்பவர்கள் பல்வகைக் குழப்பங்களுக்கு ஆளாகிறார்கள். சென்ற தலைமுறையில் கருத்துப்பிழைகள்தான் இருந்தன. பதிப்புகளில் தெளிவின்மை இருந்தது.

விளக்கங்கள் போதிய அளவு இல்லை. இந்தத் தலைமுறையில் பதிப்பாசிரியர்கள் கவனக்குறைவால் பலநூறு பிழைகள் மலிந்து விடுகின்றன. செம்பதிப்புகளை எதிர் காலத்தில், பெற விரும் பினால் நல்ல பதிப்பாசிரியர்களை உருவாக்க வேண்டும். பதிப்புப் பணியில் பயிற்சியும் அளிக்கவேண்டும்.

1. புலவர், பி.லிட். பட்டம் பெற்றவர்களுக்குக் கோடை வகுப்பு அல்லது பயிற்சிப்பட்டறை நடத்தி, அச்சு நுணுக்கங் களைக் கற்பிக்க வேண்டும்.

2. மெய்ப்பு திருத்துவதில் நேரடிப் பயிற்சி அளிக்க வேண்டும்.

3. யாப்பியல் அறிவு பெறுவதற்கும் பயிற்சியளிக்க வேண்டும்.

4. பல்வகைப் புத்தகங்களைத் திருத்தும் வழி வகை களைப் போதிக்க வேண்டும்.

5. மெய்ப்புகள் செம்மையாகத் திருத்துவதற்குரிய மொழி யறிவு, இலக்கண அறிவு, இலக்கிய அறிவு பயிற்று விக்க வேண்டும்.

6. பதிப்பாசிரியரின் பதிப்புக் கொள்கையை மெய்ப்பு திருத்துவோர் நன்கு மனங் கொள்ளும்படி புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

மிகச்சிறந்த பயிற்சியினால் பிழையற்ற செம்பதிப்புகளைக் கொண்டு வரவேண்டும். செம்பதிப்புகளின் பயனே பொருள் தெளிவும் விளக்கமுமே.

எல்லாத்துறைகளிலும் கற்பிப்பதற்கும் கற்றுக் கொள்வதற் கும் நிறைய நூல்கள் வெளி வந்துள்ளன.

அச்சுக்கலை சார்ந்த கல்வி நூல்கள் மிகக்குறைவு வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் புதிய அணுகு முறையில் உற்பத்தித் திறனைப் பெருக்க வாய்ப்புண்டு. ஆதலால் அடிப் படை நூல்களை உருவாக்கி, பன்னூறு இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வெளியீட்டுத் துறையில் ஒளிமயமான உலகை உருவாக்கலாம்.

**அச்சு நேர்த்தி:-**

மிகச் சிறப்பாக வளர்ந்து வரும் அச்சுலகில் தமிழ்நூல் வெளியீட்டின் தரம் மிகவும் பின்தங்கி உள்ளது. நவீன வாய்ப்பு வசதிகளைத் தமிழ்ப் பதிப்புலகம் இன்னும் மேற் கொள்ளவில்லை. கால விரயத்தைத் தவிர்த்து மிகப் புதியதாக வார்க்கப்பட்ட எழுத்துக்கள் மூலமே மிக நேர்த்தியான பதிப்பு களை வெளியிட வாய்ப்பு இருந்தும், இத்துறையில் இன்னும் நாம் முன்னேறவில்லை. புத்தம் புதிய முறைகளில் தமிழ் நூல்களை மிக அழகாக வெளியிடும் முயற்சிகளில் நாம் விருப்பம் கொள்வதும் இல்லை.

தனியார் பதிப்பகங்கள் ஊதிய நோக்கில் புது முயற்சிகளில் ஈடுபடுவது இல்லை. பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் கூட மிகச் சிறந்த வெளியீட்டுத் திறன் வாய்ந்த வெளியீடு களை வெளியிடத் தவறிவிட்டன. மிகப் பெரிய அமைப்புக்கள் செல்வத்தையும் காலத்தையும் விரயம் செய்கின்றன.

1. நிறுவனங்கள் பதிப்பிக்கும் நூல்கள் மிகச் சிறப்பாக அமையாததற்குக் காரணம் மிகச் சிறந்த பதிப்பாசிரி யர்கள் இன்மை.
2. சீரிய முறையில் திட்டம் தீட்டப் பெறாமை.
3. மிகச் சிறந்த அச்சகங்கள் உருவாகாமை.
4. கால உணர்வின்மை, குறித்த காலத்தில் பணி முடியாமை.
5. சிவப்புநாடா சம்பிரதாயங்களினால் பல தடைகள் ஏற்பட்டுக் குழப்பங்கள் மிகுந்து வெளியீடுகள் சீர் கெட்ட முறையில் வெளிவருதல்.
6. பல்கலைக்கழகங்கள், அரசுகள், நிறுவனங்களின் தலைமைப் பதிப்புகளுக்கும் வெளியீடுகளுக்கும் முதன்மை கொடுக்கப்படாமை.

அறிவு நலம் சான்ற அய்யர் அவர்கள் தாம் ஒருவரே பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய பணியை, பொறுப்புணர் வோடும், கடமையுணர்வோடும் செய்து தமிழ் காத்தார்.

சைவ சித்தாந்த சமாஜம் பிழையற்ற மூலப்பதிப்புகளை வெளியிட்டு மொழிப்பணி செய்துள்ளது.

எழுபது ஆண்டுகளாகச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் உரைப் பதிப்புகளையும் விளக்கப்பதிப்புகளையும் வெளியிட்டு மொழி வளர்ச்சிக்குப் பணி செய்துள்ளது.

மர்ரே இராஜம் பதிப்பு தமிழ் நூல் அனைத்தையும் பொது மக்களுக்கேற்ற வகையில் சந்தி பிரித்து எளிய முறையில் தமிழ் பரவும் வழிவகைகளைச் செய்தது.

விடுதலைக்குப் பின் ஏற்பட்ட கல்விப் பெருக்கம், அறிவு வளர்ச்சி, தகவல் தொடர்பு, இதழ்களின் பெருக்கம், முதலியவற்றால் நல்ல முறையில் தமிழ் நூல்கள் அச்சிடப் பெறுதல் காலத்தின் கட்டாயமாகிறது. இந்நிலையில் பொறுப்பற்ற முறையில் பிழைமலிந்த பதிப்புகள் பல்குமானால் அதன் விளைவுகள், பலநூறு மடங்கு தீமைகளை மொழியில் ஏற்படுத்தும். சுருக்கமாகக் கூறுமிடத்து, நிறுவனங்களின் பொறுப்பும் கடமையும் மிகப் பெரிதாகிறது. நிறுவனத்தலைவர்களின் திட்டமிடுதலும் அறிஞர்களைத் தேர்தலும் சரியான உழைப்பும் விழிப்புணர்ச்சியுமே எதிர் வரும் ஆண்டுகளில் ஏற்றமிகு பதிப்புகளைத் தர முடியும்.

பதிப்புலகம் என்பது பணஞ்சார்ந்த தொழில் உலகம் அல்ல; அறிவு நலம் சார்ந்த இலக்கிய உலகம். ஈடுபாடு கொண்டு உழைக்கும் பதிப்பாசிரியர்களால் தான் பிழையற்ற நல்ல பதிப்புகளை அளிக்க முடியும். தொடர்ந்து பயிற்சியும் நல்ல உழைப்புமே தரமிக்க பதிப்புகளைக் கொணரத்துணை செய்யும். தரத்தில் சிறந்த பதிப்புகள் வர ஆர்வமும் முயற்சியும் பயிற்சியுமே முக்கியமாகும். இது காறும் பதிப்புலகில் நடந்த பிழைகளைக் கண்டறிந்து இப்போது கிடைத்துள்ள மிகப்பெரிய வசதிகளைக் கொண்டு இளைஞர்களுக்கு நவீனப் பயிற்சியளித்து, புதியதோர் பதிப்புலகம் காண முடியும் என்பது எனது நம்பிக்கை. ஒரு அரிய நூலைச் சிறப்பாக வெளியிடுவது என்பது பெருமைக்குரிய செயலாகும். பேதமை நீங்குதற்கு வழிவகுக்கும் செயலாகும். நல்ல பதிப்புகளை மிகச் சிறப்பாக, அழகாக வெளியிடுவது தாய்மொழிக்கு நாம் செய்யும் தொண்டும் வழிபாடுமாகும்.

# பதிப்பு நெறிமுறைகள்

(திரு. டி. வி. கோபலய்யர், புதுவை)

சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் தமிழில் பல திறந்தனவாகிய இலக்கணங்களும் இலக்கியங்களும் பெரும்பாலும் ஏட்டுச் சுவடிகள் வாயிலாகவே கற்கவும் கற்பிக்கவும் பட்டன. அன்று வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் தாமே ஏடுகளில் வரையவும் வரையப்பட்டவற்றை விரைவில் பிழையின்றி வாசிக்கவும் வல்லவராய் இருந்தனர். இன்று நாம் கூடிய சந்திகளைப் பிரித்துப் பொருள் எளிதில் புலப்படுமாறு பதிப்பிக்கப்பட்ட அச்சு நூல்களைத் தடையின்றி விரைந்து வாசிப்பதுபோன்ற இயல்பு அன்று சுவடிகளை வாசிப்பதன்கண் அக்காலப்புலவரிடைக் காணப்பட்டது.

சுவடிகளை வாசித்து அறிவது அச்சிடப்பட்ட நூல்களை வாசிப்பது போன்ற எளிய செயலன்று. இன்று அச்சு நூல்கள் எல்லாராலும் தெளிவாக அறியப்படும் ஒரே வகைப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு சந்திப்பிரிப்பு, தெளிவு கருதி உடம்படு மெய்யைப் பெரும்பாலும் பயன்படுத்தாமல் எழுதுதல், பத்திப் பிரிப்பு, தேவைப்பட்ட நிறுத்தக் குறியீடுகளை இடம் நோக்கிப் பயன்படுத்துதல், செய்யுட்ளை அடிவரையறை பிறழாமல் கடினமான சந்திகளைப் பிரித்தே எழுதிச் செய்யுள்களில் தேவைப்பட்ட இடங்களில் நிறுத்தக் குறியீடுகளை அமைத்துப் பதிப்பித்தல் ஆகிய பல நலன்களோடு பொருந்திப் பயில்வாருக்கு மொழியை எளிமையான நிலையில் உணர்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன.

ஓலைச் சுவடிகளின் நிலை இதற்கு மறுதலையானது. ஓலைச்சுவடிகளில் பாடல்கள் பெரும்பாலும் அடிவரையறை இன்றி நிறுத்தக் குறிகளும் இல்லாமல் தொடர்ந்தே பொறிக்கப் பட்டுப் பாடல் முடியும் இடத்தில் பாடல் எண் மாத்திரம் பொறிக்கப்பட்டிருக்கும். பாடல்களின் யாப்பு, தூக்கு, தொடை இவற்றை உணர்ந்தவர்களே எளிதில் பாடலடிகளைப் பகுத்துக் காண்டல் இயலும் மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல், உயிர்மெய் எகர ஒகரங்களுக்கு ஒற்றைக் கொம்பும், ஏகார ஓகாரங்களுக்கு இரட்டைக் கொம்பும் இடுதல், காலுக்கும்

இடையின ரகரத்திற்கும் வேறுபாடு காட்டுதல், எகர ஏகார ஒகர ஓகாரங்களிடை வரிவடிவில் வேறுபாடு காட்டுதல் போல்வன பெரும்பாலும் சுவடிகளில் இடம் பெறா. யாப்பியல்பினையும், பொருளியல்பினையும் உளங்கொண்டே இவற்றை வாசித்துப் பயன் கோடல் வேண்டும். இத்தகைய வரிவடிவினை வள்ளல் பெருமான் தம் திருக்கரத்தால் வரைந்துள்ள அருட்சோதி அகவலின் காகிதப்படியில் காணலாம். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் காசிவாசி செந்திநாதய்யர் தேவாரப் பதிகங்களைப் படியெடுத்து வைத்துள்ள காகிதச் சுவடிகளிலும் இத்தகைய வரிவடிவே காணப்படுகிறது.

ஏட்டுச் சுவடியில் அதற்கென அமைந்த வரிவடிவில் தாமே பொறித்துப் பயின்றவர்கள், ஏட்டுச் சுவடிகளை விரைவில் பிழையற வாசித்துக் காகிதச் சுவடிகளில் இக்காலத் தெளிவான வரிவடிவில் பிழையறப்படியெடுத்துச் சென்ற நூற்றாண்டின் இடைக்காலம் தொட்டுத் தமிழில் அரிய பெரிய பழைய நூல்களைப் பதிப்பித்துத் தந்துள்ளனர். உ. வே. சா. ஐயர் அவர்களுடைய பதிப்புக்கள் எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்றுள்ளமைக்கு அவர் ஏட்டுச் சுவடிகளில் எழுதிப் பயின்றதும் ஏட்டுச் சுவடிகள் வாயிலாகவே பல நூல்களையும் கற்றதும் காரணங்களுள் சிலவாகும் வையாபுரிப் பிள்ளையவர்கள் பல நூல் ஆய்ந்து பதிப்பித்த களவியல் காரிகைப் பாடல்கள் பல பிழையுடனிருக்கவும், அப்பாடல்களில் பல தமிழ் நெறி விளக்கத்துக்கு எடுத்துக்காட்டும் பாடல்களாக ஐயர் அவர்களால் பிழையறத் திருத்தமாகப் பதிக்கப்பட்டிருப்பதற்கும் மேற்கூறிய செய்திகளே காரணமாகும்.

சுவடிகளில் நூல்களைப் பொறிப்பவர் இரு திறத்தார். சிறிதளவு தமிழ் கற்ற அளவில் தாம் பயிலுவதற்காகச் சுவடிகளை இரவல் வாங்கிப் படி எடுத்துக் கொள்வோரும், சுவடிகளை ஊதியம் கருதிப் படியெடுத்துக் கொடுப்பதனையே வாழ்க்கைத் தொழிலாகக் கொள்வோரும் ஆகிய இருவரும் ஒரு திறத்தவர். கற்று மூத்த சான்றோர்களாய்த் தாம் முன்பு பயிலாத நூல்களையும் பயிலவேண்டும் என்ற ஆர்வத்தால் சுவடிகளை இரவல் வாங்கித் தமக்கே அந்நூலின் ஒருபடி இருத்தல் வேண்டும் என்ற விழைவோடு சுவடிகளில் பொறித்து வைத்துக்

கொள்பவர் மற்றைத் திறத்தவர். முதல் திறத்தவர் வரைந்த சுவடிகளில் பிழைகள் இருதிறத்தனவாக இருக்கும். தம்முடைய குறையறிவால் ரகர றகர, ணகர நகர னகர, லகர ளகர ழகர வேறுபாடுகளைத் தெற்றென உணராததால் தம்மையறியாமல் தாமே இழைக்கும் பிழைகள் ஒரு வகையின. சுவடிகளில் உள்ள செய்திகளைத் தெளிவாகத் தவறின்றி உணர இயலாமல், தவறாகப் படியெடுத்ததற்கண் நிகழும் பிழைகள் இரண்டாம் வகையின. இத்தகையோர் பொறித்த சுவடிகளே நமக்குக் கிட்டும் சுவடிகளில் பலவாகும். சுவடிகளில் உள்ள எழுத்துக்களைப் பொருளுணர்வோடு பிழையற உணரும் ஆற்றல் இன்றி, ஓரெழுத்தைப் பிறிதோர் எழுத்தாகப் பிறழ உணர்ந்து படியெடுக்கப்பட்ட இத்தகைய சுவடிகளைக் காகிதத்தில் படியெடுப்பவர்கள் கூர்ந்து நோக்கி இத்தகைய பிழைகளை விடுத்துப் பல கூறும் நோக்கி உண்மைப் பாடத்தை ஊகித்தறிந்து எழுத வேண்டிய நிலை ஏற்படும். எனவே, சுவடிகளிலிருந்து படியெடுப்பவர் விரைவில் படியெடுத்தலை மாத்திரம் உளங்கொள்ளாது பிழையறப் படியெடுத்தலையே தம் இன்றியமையாத கடனாகக் கோடல் வேண்டும்.

ஆனால் கற்று வல்ல சான்றோர்கள் பழைய சுவடிகளின் பிழைகளை நீக்கித் தாம் படியெடுக்கும் சுவடிகள் செப்பமுற அமைந்திருக்கும். மகாவித்துவான் பிள்ளையவர்கள் தம் கையினாலேயே கம்பராமாயணத்தை மூன்று முறை படியெடுத்திருந்தார் என்று ஐயரவர்கள் குறிப்பிடுகிறார். இத்தகைய சுவடிகள் கிடைப்பது பெரும்பேறே. இவற்றைப் படியெடுக்கும் போது, சுவடிகளில் பொறித்த ஒவ்வொருவர் எழுத்திலும் சிலச்சில வடிவமைப்பு வேறுபாடுகள் காணப்படுமாதலின் அவற்றை மனங்கொண்டு பொருளுணர்ச்சியோடு படியெடுத்தல் வேண்டும்.

இவற்றை எல்லாம் நோக்க வெறும் எழுத்தறிவு சிறிது உடையவர்கள் சுவடிகளைப் பெயர்த்து எழுதும் பணிக்கு முழுத்தகுதி உடையவர் அல்லர் என்பதும், நல்ல இலக்கிய இலக்கண அறிவு பெற்றவரே அப்பணிக்கு ஏற்றவர் என்பதும், அவரே பாடவேறு பாட்டிற்கும் எழுத்துப்பிழைக்கும் உள்ள வேறுபாட்டினைப் பகுத்தறிந்து பிழைகளை நீக்கிப் பாடவேறுபாடுகளை மாத்திரம் கொள்ளும் ஆற்றலுடையவர் என்பதும்,

ஏட்டுச் சுவடிகளுடைய எழுத்து எல்லாவகைச் சுவடிகளிலும் அச்சுப் போன்ற தெளிவுடைத்தாக இருத்தல் இயலாமையின் சுவடிகளைத் தவறின்றிப் படித்துப் பழகியவர்களே அவற்றைப் படியெடுக்கும் பணியில் ஈடுபடத்தக்கார் என்பதும் போதரும்.

இனி, நல்ல கல்வியும் பிழை நீக்கிச் சுவடிகளைப் படியெடுக்கும் ஆற்றலும், திருந்திய பதிப்பினைக் கொணர்தல் வேண்டும் என்ற ஆர்வமும் உடையவர்களும் ஒரோ வழிக் கவனக் குறைவாலும் சோம்பலாலும் தவறு என்று திருத்திக் கொள்ளப்பட வேண்டுவனவற்றையும் திருத்தாது நெகிழ்த்தலும், செய்யுள் அடிகளின் திருத்தமான நல்ல பாடங்களைக் கொள்ளாது விடுத்தலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு நூலினை எடுத்துக் கொள்ளுவோம்.

முகவை இராமாநுசக் கவிராயர் சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த பெரும்புலவர். அவர் நன்னூலுக்கு விருத்தியுரை ஒன்று எழுதிக் கி.பி. 1862-இல் தம் அச்சுக் கூடத்திலேயே பதிப்பித்து வெளியிட்டார். 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி முடியச் சிறப்பாக இருந்த சங்க இலக்கியம் முதலியவற்றின் பயிற்சி 19-ம் ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை மங்கியே காணப்பட்டது. இந்த ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் சங்க இலக்கியப் பயிற்சி பெரும்பாலும் பெரும் புலவரிடையும் இல்லாது போக, 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இருந்த உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் எடுத்துக்காட்டாகத் தந்த சங்க இலக்கிய அடிகளைத் தவறின்றி உணர வாய்ப்புக் கிட்டாத காலத்தில் வாழ்ந்த இக் கவிராயருக்கு, எடுத்துக்காட்டடிகளில் இருந்த பிழைகளைக் களைந்து நல்ல இடங்களையே தம் உரையில் எடுத்துக்காட்டும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. இது காலத்தின் குறையே அன்றிக் கவிராயருடைய நுண்மதியின் இழுக்கு அன்று. அக் காலத்தில் இலக்கண நூல்களை உரையுடன் பாடம் சொல்லிய சான்றோர்கள் எடுத்துக்காட்டுப் பாடங்களுக்கும் பொருள் சொல்லி விளக்கும் மரபு இருந்தது. பாடம் கேட்டபோது, அவர் எடுத்துக்காட்டுப் பாடல்களுக்கும் பொருள் சொல்லி விளக்கி வந்தார் என்று குறிப்பிடுவது கொண்டு தெளியலாம்.

இராமானுசக் கவிராயரின் நன்னூல் விருத்தியின் இரண்டாம் பதிப்பு கி.பி. 1940-இல் சங்க இலக்கியப் பயிற்சி மிகுந்த காலத்தில் சிறந்த புலவர் ஒருவரால் பார்வையிடப்பட்டு, அவர் வரைந்த குறிப்புரையுடன் வெளிவந்துள்ளது. ஐயர் அவர்களின் நன்னூல் சங்கர நமசிவாயப் புலவர் உரையின் இரண்டாம் பதிப்பு 1935-ல் வெளிவந்தது. அஃது இலக்கண நூல்கள் உரையுடன் எவ்வாறு பதிப்பிக்கப்படல் வேண்டும் என்பதற்கு முழுமையான எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும் செய்தியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அப்பதிப்பு வெளி வந்த சில ஆண்டுகளுக்குப் பின்னரே இராமானுசக் கவிராயர் விருத்தியுரையின் இரண்டாம் பதிப்பு வெளி வந்துள்ளது. இப்பதிப்பில் முதற்பதிப்பில் காணப்படாத செப்பங்கள் சில உள்ளன. எடுத்துக்காட்டுப் பாடலடிகள் சிலவற்றிற்கு இருப்பிடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் நன்கு அறியப்பட்ட பல எடுத்துக்காட்டுப் பாடலடிகளின் இருப்பிடங்கள் சுட்டப்படவில்லை. சில இடங்களில், தம் காலத்துப் போதிய வாய்ப்பு இன்மையின், கவிராயர் தவறாக வரைந்த பாடலடிகளின் உரைகள் மாற்றப்படாமலேயே பதிப்பிக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் பதிப்பித்தமைக்குக் காரணம் கவனக்குறைவும், சோம்பலும் ஆகிய இரண்டனையன்றிப் பிற இல்லை. இவ்விரண்டும் எந்தப் பதிப்பாசிரியராலும் அணுகுதல் கூடாது. ஒரு சில எடுத்துக்காட்டுக்களை நோக்குவோம்

பக் 314 காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் யானையின் கோடு நொடுத்து உண்ணும்
– குறுந் – 100, நொடுத்தல் – ஒடித்தல் என்று உணரவரையப்பட்டுள்ளது. நொடுத்தல் – விலைக்கு விற்றல் என்பதே உரிய பொருள். வாணுதல் அரிவை, காணிய, பூணகமாகநின் புனைமணி நெடுந்தேர்
பதிற். 81.

,, பூண்கமாள நின்புனைமணி நெடுந்தேர் என்பதே தக்க பாடம் கொங்கர்ப் பணியியர் பழையன் வேல் வாய்த்தலின் வேல்வாய்த்தன்ன என்பதே பிழையற்ற பாடம்.

317 காணான் கழிந்த வைகலும்
காணாள் கழிநலும் உண்டென்று ஒருநாள் என்பதே
பாடம்

320 அமரிய முகத்தாள் விழிநிலை கொள்ளாள்
விளிநிலை கேளாள் என்பதே பாடம்

327 கடல்போல் தோன்றல் தங்குவது நிலையே
கடல்போல் தோன்றல காடு இறந்தோரே என்பதே
பாடம்

338 மன்னா உலகத்து மன்னியது புரிமோ
மன்னியது புரைமே என்பதே பாடம்

344 நீயே, செய்வினை மருங்கின் செலவயர்ந்தியாழ -
செலவயர்ந்தி - செலவு அயர்ந்தாய் என்று பொருள்
கூறியுள்ளார்.
செலவயர்ந்து என்பது வினையெச்சம் முற்று அன்று

345 ஈங்காயினவால் என்றிசின். என்றிசசன்- என்றார
என்றிசின்யானே எனவருதலின் என்றேன் என்பதே
பொருள்
நற்றிணை - 55

அழல் அடைந்த மன்றத்து அரந்தையரா்ய் நின்றார்
அலந்து அயரா நின்றார் என்பதே நல்ல பாடம்

353 நனி பேதையே நயன்இல் கூற்றம். பேதை-பெண்
பேதை-அறிவிலி என்பதே பொருள்

355 குடிஞை இரட்டும் குடிஞை-ஆறு
குடிஞை இரட்டும் நெடுமலை அருக்கத்து-மலைபடு
கடாம் 141.
குடிஞை - பேராந்தை என்பதே பொருள்

356 மாரி அழுங்கினமூதூர் - மேகம் முழங்கின மூதூர்
இரும்பிழி மாரிஇல் அழுங்கல்மூதூர் - ஆரவாரத்தை
உடைய பழைய ஊர் என்பதே உரை

357 துனைபரி துரக்கும் **துஞ்சாச் செலவின்** - தூக்கப் பிரயாணத்தில்

காலம் தாழ்த்தாத பிரயாணம் என்பதே பொருள்

358 கய - மேன்மை. மென்மை என்பதே பொருள்

359 சாயன் - மேன்மை. மென்மை என்பதே பொருள்

பக் 359 நவிரம் மேவும் காரிகை -மயிலும் ஆசைப்படும் மாது

நவிரம் மேஎ உறையும் காரி உண்டிக்கடவுள்

(மலைபடு 82)

நவிரமலையை விரும்பித்தங்கியிருக்கும், விடத்தை உண்ட சிவபெருமான் என்பதே பொருள்

360 பாய்ந்து ஆய்ந்த தானை - பரந்த ஆராய்ந்தெடுக்கப் பட்ட சேலை

பொங்குதல் நுணுகிய ஆடை என்பதே பொருள்

நிழத்த யானை மேய்புலம்படா—நுணுகிய யானை மேயுமிடம் தேடிச் செல்லாது

வலிகுறைந்த யானை மேயுமிடம் தேடிச்செல்ல என்பதே உரை - படர என்பதே பாடம்

கயல் அறல் எதிரக் கரும்புனல் சாஅய்—மீன்களும் கடல் அலைகளும் பாய்ந்த வேகம் தங்கிய நீர் நுணுகி மிக்க வெள்ளம் குறைதலால் கயல் மீன் அற்ற நீர்ப்பகுதியை நோக்கிச் செல்ல என்பதே பொருள்.

361 எய்யாமையல்லை நீயும் வருந்துதி — அறியாமையை உடைய அல்லை

எய்யாமையலை — பிறர் அறியாத மயக்கத்தை உடையை என்பதே பொருள்

362 கவ்வுக் கருங்குரையள் - அகத்திட்ட வேகம் பொருந்திய குதிரையை உடையாள் - குரை-குதிரை

கவ்வுக் கருங்குரையள் — விரைந்து தழுவுதலை உடையவள் என்பதே பொருள்

363 நாமநல்லார்க்கு-அச்சத்தை உடைய மகளிருக்கு நாமநல்லரா-அச்சம் தரும் பெரிய பாம்பு என்பதே பொருள்

365 நணவுப்புகுவிறலி - போர்க்களப் புகுந்த யாடு விச்சி. நாட்டிய அரங்கினுள் நுழைந்த கூத்தி என்பதே பொருள்

ஐயர் அவர்களுடைய மயிலை நாதர் சங்கர நமசிவாயர் உரைப்பதிப்புக்களையும், தொல்காப்பியச் சேனாவரையர் உரைப்பதிப்புக்களையும் கூர்ந்து நோக்கி இராமாநுசக்கவிராயர் விருத்தியுரை பதிப்பிக்கப்பட்டிருப்பின் உரையின் பல இடங்களிலும் எடுத்துக்காட்டுப் பாடலடிகளின் இருப்பிடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கலாம். மேல் குறிப்பிடப்பட்டுள்ளன போன்ற இடங்களில் வாய்ப்பின்மை காரணமாக அவ்வச் செய்யுளடிகள் வந்த இடங்கள் அறியப்பெறாமையால் தவறாக எழுதப்பட்ட செய்யுளடிகளின் உரைகளைத் திருத்தி அமைத்திருக்கலாம். அன்றேல் உரைக்குறிப்பினையே நீக்கியிருக்கலாம். எனவே, அச்சில் ஆசிரியரே பதிப்பித்த நூலின் மறுபதிப்புக் கொணர்வதற்குக் கூட மனம் ஒன்றிய முயற்சி தேவை என்பது அறியப்படுகிறது. தொல்காப்பிய முப்படலங்களுக்கும் உரிய உரைகள் யாவும் பலமுறை பலரால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஐயர் அவர்கள் பதிப்பித்த நூல்களின் முதற்பதிப்பினை விட இரண்டாம் பதிப்பும் இங்ஙனமே மூன்றாம் நான்காம் பதிப்புக்களும் தரத்தில் முறையே உயர்ந்து நிறைவை எய்தியுள்ள செய்தியைக் காண்கிறோம். ஆனால் தொல்காப்பியம், கலித்தொகை முதலிய இலக்கியம் இவற்றைப் பொறுத்தவரையில் பழைய தவறுகள் களையப் பெற்றனவாகத் தெரியவில்லை. புதிய தவறுகள் சிலவும் இடம் பெற்றுள்ளமையும் ஒரோ வழி உணரப்படுகிறது.

பத்திப்பிரிப்பில் தவறு, நிறுத்தல் குறியீட்டில் தவறு, பாடல் இரண்டனைச் சார்ந்த சொற்றொடர்களை ஒரே மேற்கோள் குறிக்குள் இணைத்தல், பாடலடிகளைப் பிழையொடு வரைதல், பொருளுணர்வுக்கு முரண்பட்ட தவறான சொற்கள் சேர்ந்தனவற்றைக் களையாமை, சொற்றொடர்களைப் பொருள் சிதையப் பிரித்தல், உரிய சொற்களை விடுத்துத் தவறான சொற்களைக்

குறித்தல், நல்ல பாட வேறுபாடுகளை விடுத்து அல்லன கோடல் முதலிய சிதைவுகள் பலவும் களையப்படாமல் தொடர்ந்து பலரால் பதிப்பிக்கப்பட்ட பல பதிப்புக்களிலும் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்ற. இத்தவறுகள் களையப் படாமையின் காரணம் கவனக்குறைவும் பதிப்பில் போதிய ஆர்வமின்மையுமாம். ஒவ்வொரு சிதைவுக்கும் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை நோக்குவோம்.

## I. பத்திப்பிரிப்பில் பிழை

எழு.230.ந. இன்றும் இதனானே யாஅத்துக்கோடு என்று

அத்துப்பெறுதலும் கொள்க. அகரமும் வல்லெழுத்தும் விலகாமையின்.

யாமரக் கிளவி என்பதனைக் 'குறியதன் முன்னர்' என்பதன் பின் வையாத அதனால் இராவிற் கொண்டான்...என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க.

சரியான பாடம்

இன்றும் இதனானே...கொள்க — இது தனிப்பத்தி.

அகரமும் வல்லெழுத்தும்...வீழ்க்க — இது தனிப்பத்தி.

இதன்கண் நிறுத்தக் குறியீட்டுப் பிழையும் உள்ளது.

கலி.52.ந. ஏகாரம் பிரிநிலை!

இவர்கள் முன்னர்க் களவொழுக்கம் ஒழுகியவாறும், அக்காலத்து அவன் புதியனாய் நடித்தவாறும் இவள் நடுங்கியிருந்தவாறும் பிறர் அறியாராதலின், இத்தாழிசைகள் 'பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின்' என்றும் பொருளியல் சூத்திரத்தில் கூறிய காப்பின் வழு உணர்த்தின.

சரியான பாடம்

ஏகாரம் பிரிநிலை இவர்கள்....அறியாராதலின்— தனிப்பத்தி
இந்நாழிகைகள்....வழு உணர்த்தின — தனிப்பத்தி

இதன்கண் நிறுத்தக் குறியீட்டுப் பிழையும் உள்ளது.

II. நிறுத்தக்குறியீட்டில் தவறு:

கலி.கட.வாழ்.ந. இது நான்கு உறுப்பின் வந்ததேனும் தேவபாணியாய் வருதலின், முதனிலை ஒத்தாழிசை ஆகாது. 'ஏனை ஒன்றே தேவரிப்பராஅய முன்னிலைக் கண்ணே' என்பதனால் தேவர்ப் பராயிற்றேனும் வண்ணகமும் ஆகாது. எண்ணும் சின்னமும் இழத்தலின்.

சரியான பாடம் இது....ஆகாது, ஏனை....என்பதனான். தேவர்ப் பராயிற்றேனும்... இழத்தலின்.

II. ஒரே மேற்கோள் குறிக்குள் இருபாடல் தொடர்கள்:

எ.345.ந. 'மின்னுச்செய் விளக்கத்துப் பின்னும் பிணியவிழ்ந்த
சரியான பாடம் 'மின்னுச் செய் விளக்கத்து' — கலி
'பின்னுப் பிணி அவிழ்ந்த' — யாப்பருங்கலக் காரிகை எடுத்துக்காட்டுப் பாடலடி

சொ.341.ந } 'பையுள் மாலைப் பழுமரம் படரிய
சம.பதிப்பு } சிறுமை உறுப செய் பறியலரே'

சரியான பாடம் 'பையுள் மாலைப் மாலைப் பழுமரம் படரிய — அகம்
'சிறுமை உறுப செய்பறியலரே' — நற்.

IV. பாடலடிகளில் பிழை:

எ.6.ந 'தூஉஉத் தீம்புகை தொல்விசும்பு' 'பேஎர்த்துக்கொல்
சரியான பாடம் 'தூஉஉந் தீம்புகை தொல்விசும்பு போர்த்த கொல்'

எ.180.ந ஒன்றாக நின்ற கோவினை அடர்க்க வந்த
ஒன்றாது நின்ற, கோலினை அடர்ந்த வந்து
— சிந்தாமணி

V. பொருளுணர்வுக்கு முரண்பட்ட சொற்களைக் களையலாம்.

சொ.35.சே அல்லது இல் என்பதற்குத் தன்னுழை உள்ளது அல்லது என்றும்

சரியான பாடம் அல்லது என்பதற்குத் தன்னுழை உள்ளது அல்லது என்றும்

பொ.5.ந இதற்கு உதாரணம் இறந்தது. கருங்காற்குறிஞ்சி சான்றவெற் பணிந்து என்பது கரு.

இதற்கு உதாரணம் கருங்காற்குறிஞ்சி சான்றவெற் பணிந்து என்பது.

## IV சொற்றொடரைப் பொருள் சிதையப் பிரித்தல்

பொ. 90. ந முருகாற்றுப்படை என்பதற்கு முருகன்பால் வீடு பெறுவதற்குச் சமைந்தான் ஓர் இரவலனை ஆற்றுப்படுத்தது என்பது பொருளாகக் கொள்க.

சரியான பாடம் முருகாற்றுப்படை......சமைந்தானோரிரவலனை ஆற்றுப் படுத்து......கொள்க.

சொ.486.ந. உம்மை எச்சம் இரு ஈற்றானும்

சரியானபாடம் உம்மை எச்சம் இரு வீற்றானும்

## VII உரிய சொற்களை விடுத்துத் தவறான சொற்களைக் குறித்தல்

பொ.498.வே. யாமோர் கூட்டம் உலகியல் ஆகாது ஆதலான் இல்லது அன்றாம் ஆகவே

திருந்திய பாடம் யாமோர் கூட்டம் உலகியல் ஆதலான் இல்லது அன்றாம் ஆகவே

பொ.304.மே. கராத்தின் வெய்யவோ தோள்

திருந்திய பாடம் காரத்தின் வெய்யஎந்தோள்–ஐந், ஐம். 24.

சொல், 2.3 அறிசொல்—அதற்குக் கருவியாகிய சொல்

திருந்திய பாடம் அறிசொல்—அறிதற்குக் கருவியாகிய சொல்

சொல்.273.ந கறுத்தக்காயா; தவறற்றது–கறுத்தகாயா

## VIII நல்லபாட வேறுபாடு கொள்ளாமை

கலி56.ந அணிமயில் பெடையின — அழகினை உடைத்தாகிய பெடையினை உடைய மயில் என்ன

நல்லபாடம் அழகிகளை உடைத்தாகிய பெண்மையினை உடையமயில் என்ன.

'சேவற்' பெயர்க் கொடை' என்ற மரபியல் நூற்பா உரையினை நோக்குக.

இவற்றை எல்லாம் உள்ளம் கொள்ளும் போது நாம் நல்ல பதிப்பிற் குரிய நெறிமுறைகளாகக் கீழ்க்காணுபவற்றைக் கோடல் வேண்டும்.

1. நிலைமொழி ஈற்று மெய்யினை வருமொழி முதலொடு புணர்த்தும், யாண்டும் உடம்படு மெய்யினை இணைத்தும் திரிந்த புணர்ச்சிகளை எஞ்ஞான்றும் அமைத்தும் அமைந்துள்ள உரைநடைப் பகுதிகளைச் சரசுவதி மகால் தொல்காப்பியச் சொல்லதிகார நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பினைச் சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்காமல், பொருளுணர்சிக்குத் திரிவு நிகழாத வகையில், கற்போருக்கு எளிதில் பொருள் புலப்படல் வேண்டும் என்ற கருத்தோடு இயன்றவரையில் சொற்களைப் பிரித்தே பதிப்பித்தல் வேண்டும்.

2. இயன்ற வரை முயன்று மேற்கோள் பாடல்கள் எந் நூலின் எந்த எண்ணுடைய பாடல்கள் என்பதனைச் சுட்டு வதோடு விளங்கா மேற்கோள் அகர வரிசை ஒன்றும்பிற் சேர்க்கையில் இடம் பெற வேண்டும்.

3. இலக்கியங்களைப் பதிக்கும் பொழுது ஒவ்வொரு பாடலிலும் இன்றியமையாது விளக்கப்பட வேண்டிய அருஞ் சொற்பொருள் எல்லாம் அந்தந்தப் பக்கத்தின் அடிக் குறிப்பாகவே தருதல் வேண்டும்.

4. பண்டே பதிப்பான தொருநூலுக்குப் புதியபதிப்பு ஒன்றனை வெளிக்கொணரும் போது அப்புதுப்பதிப்பின் சிறப்புத் தகுதிகளை முன்னுரையில் விரிவாகக்குறிப்பிடல் வேண்டும்.

5. பிற்சேர்க்கைகளான பாடல் முதற்குறிப்பு அகரவரிசை, உவமைகளின் அகரவரிசை, அருஞ்சொற்பொருள் அகரவரிசை முதலியனயாவும் சிறிய எழுத்தில் இரண்டு பத்திகளாக, மிகுதியான பக்கங்களைக் கவராதவகையில் ஐயரவர்களின் பதிப்புக்களைப் போல அமைக்கப்படல் வேண்டும்.

6. தேவையான அளவு தக்க ஒப்புமைப்பகுதிகள் சுட்டப்படுதலும் பதிப்பினை அழகுறுத்தும்.

7. அரிதின் முயன்று அச்சுப்பிழைகளை அடியோடுகளைந்த பதிப்பே நன்மக்களால் போற்றப்படும்.

8. பல பிரதிகளைக் கொண்டு ஒப்புநோக்கி ஒரு நூலினைப் பதிப்பிக்கும் பொழுது பிழைகளைப் பாடவேறுபாடுகளாகக் கொள்ளாமல் அவற்றை அடியோடு நீக்கித் தக்க பாடவேறுபாடுகளை மாத்திரம் அடிக்குறிப்பாகச் சிறிய எழுத்தில் பதிப்பித்தல் வேண்டும். சுவடிகளின் பெயர்களைச்சுட்டல் வேண்டின் அவற்றிற்கு 1,2 என எண்ணிட்டுச்சுட்டுதலே போதுமானது.

9. ஏட்டுச்சுவடியைக்காகிதத்தில் படியெடுத்த பிரதியைக் கொண்டு செப்பம் செய்து பதிப்பிக்குங்கால் ஐயம் நிகழும் இடங்களிலெல்லாம் மூலச்சுவடியைப் பார்ப்பதால் உண்மைப்பாடம் காணவும் வாய்ப்புக்கிட்டலாம். எடுத்துக்கட்டாகக் காகிதப் பிரதியில் 'கோதைகொள்வர் மன்' என்று இருப்பின் அதனையே முழுமையாக நம்பாமல் ஏட்டுச்சுவடியைப்பார்த்தால் அத்தொடர் 'கோதை கொள்வர் மண்' என்றிருப்பதனைக் காணலாம்.

10. பொருள் உணர்ச்சியோடு பத்திப்பிரிப்புச் செய்து, நிறுத்தக்குறியீடுகளை நுணுகி ஆய்ந்து அமைத்து அவற்றிலும் அச்சுப்பிழைகள் நேராதவாறு முயன்று பார்த்துப்பதிப்பித்தலே பதிப்பிற்குச் சிறப்புத்தருவதாகும்.

# பதிப்பு நெறி இயல்

**பதிப்பு வகை—**

**சுவடிப் பதிப்புகளை**

1. பழைய பதிப்பு  2. திருத்தப் பதிப்பு
3. தெளிவுப் பதிப்பு  4. ஆராய்ச்சிப் பதிப்பு
5. தொகுப்புப் பதிப்பு  6. மறுபதிப்பு

என ஆறு பிரிவுகளாக வகைப்படுத்திக் காணமுடிகிறது. இவற்றுள் சுவடி வேறு, அச்சுநூல் வேறு என்று பிரித்து அறியமுடியாத அமைப்பினை உடையது பழைய பதிப்பு; இக்காலத்துக்கு ஏற்புடையதுஆகாதது. ஒரு நூலின் பாடத்தில் காணும் ஐயங் களை நீக்கிப் பொருள் தெளிவு ஏற்படுமாறு பதிப்பித்து, படிப்பவர்கள் தாங்களே பாடத்தை உறுதி செய்துகொள்ளு வதற்குத் துணையாக எல்லாப்பாடங்களையும் ஒழுங்காகக் கொடுத்துப் பதிப்பிக்கும் திருத்தப்பதிப்பு வகையே ஏற்புடைய ஒன்று. திருத்தப் பதிப்பு முறைகளோடு நூலின் முழுத்தன்மை யையும் ஆய்ந்து நூலில் காணப்பெறும் சிறப்புச் செய்திகள் நூலாசிரியர், உரையாசிரியர், பாட்டுடைத் தலைவர் ஆகியோர் வரலாறுகள், ஆய்வாளருக்குப் பயன்படும் அருஞ்சொல் முதலிய வற்றின் அகரநிரல்கள், பதிப்பு வரலாறு ஆகிய எல்லா வகை யான செய்திகளையும் தன்னகத்து அடக்கியதாய் அமையும் ஆராய்ச்சிப் பதிப்பு இன்றைய நிலையில் பெருவழக்காகி வருகிற ஒன்று.

பொதுவாக அச்சிடுதல் என்பதுவேறு; பதிப்பித்தல் என்பது வேறு.

"இப்பதிப்பில் பலவான புதிய பாடங்களை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். யாவும் திருத்தமான பாடங்கள், அந்த வகையில் இதுவே சிவக்கொழுந்து தேசிகருடைய பதிப்புக்குப் பிறகு முதன் முதலாக வந்த பதிப்பு மற்றவையாவும் மறு

அச்சுக்களே; பதிப்புக்கள் அல்ல''[1] என்னும் கருத்து பதிப்பித்தலுக்கும் அச்சிடுதலுக்குமுள்ள வேறுபாட்டைச் சுட்டுவதாகும். மேலும் "நூல்களைப் பதிப்பிப்பதில் ஆராய்ச்சி என்பதற்கு இடமில்லையே; ஏட்டிலுள்ளதை அப்படியே பதிப்பிடத்தானே வேண்டும்?

என்று சிலர் கருதுவர்.... முதலாவது தமிழ் ஏடுகளில் எழுதப்பட்டிருப்பனற்றை வாசிப்பதே மிக்கசிரமமானவேலைதாகும். உதாரணமாக பொன் என்பதை—பொன், போன, பேரன் என்று வாசிக்கலாம். இதை நிச்சயப்படுத்த பொருளுணர்ச்சி செய்யுளோசையுணர்ச்சி இருத்தல் வேண்டும்.

"யாரினு மினியன் பேரன் பினனே" என்பதை
"யாரினு மினியன் போன பின்னே" என்று அச்சிட்டனர்''[2]

என்னும் இக்கூற்று பதிப்பிப்பதன் அருமையை உணர்த்துவதாகும்.

**பதிப்பிக்கும் நூல்**—சுவடிகளிலிருந்து பதிப்பிக்கத் தேர்ந்தெடுக்கும் நூல் இரண்டு வகையில் அமையும். ஒன்று இதுவரை அச்சாகாத நூல். மற்றொன்று எப்போதோ அச்சிடப்பெற்றது ஆயினும் இன்று கிடைக்காத நூல். இக்காலத்துக் கிடைப்பதாயினும் பலவகைத் திருத்தங்களோடு கூடிய ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிடத் தகுதி வாய்ந்ததாகவும் இருக்கலாம். இவற்றுள், பதிப்பிக்கத் தேர்ந்தெடுக்கப் பெற்ற சுவடியை இயன்றவரை தூய்மை செய்து பதிப்பிப்பது முழுமையான பதிப்பாகப் பயன் தரும். தூய்மை செய்வது என்பது திருத்தமான பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்தலும், பலவகைக் காரணங்களாலும் விடுபட்டவற்றை நிரப்பி முழுமையாக்கிப் பதிப்பித்தலும் என இருவகையில் அமையும்.

**திருத்தமான பாடம்**— திருத்தமான பாடம் என்றதனால் மூலபாடத்தைத் திருத்தி, மாற்றிப் பதிப்பிப்பது என்று பொருளாகாது. பலசுவடிகளை ஆய்ந்து அவற்றுள் கிடைக்கும் ஒன்றுக்கு

---

1. திருவாசகக் குறிப்புக்கள், பக். 156.
2. தமிழ்ச் சுடர்மணிகள், பக். 316.

மேற்பட்ட பாடங்களில் சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பது என்பதே பொருளாகும். சான்றாக,

“ஓத உலவா ஒருதோழம் தொண்டர் உளன்”[3] என்னும் சுவடிப் பாடலடி. “ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்” என்று அச்சிடப் பெற்றுள்ளது. புகழ்ச்சி முற்றுப் பெறாத ஒப்பற்ற உயிர்த்துணைவன், அடியார் உள்ளத்தினன் என்று உரை எழுதப் பெற்றுள்ளது. ஆனால் சுவடிகளில் காணப்பெறும் ‘ஒரு தோழம் தொண்டர் உளன்’ என்னும் தொடரில் உள்ள தோழம் என்ற சொல் ஒரு பேரெண்ணைக் குறிப்பதாகும்.

“உண்ணற் கரிய நஞ்சையுண் டொருதோழந் தேவர்
விண்ணிற் பொலிய அமுதளித்த விடைசேர் கொடியண்ணல்”

என்பது சம்பந்தர் தேவாரம் (804). ‘ஒரு தோழம் காலம்’ என்பது பரிபாடல். இங்குப் பொருளாவது இறைவன்...எண்ணிறந்த தொண்டர்களை உடையவன் என்பது. எனவே தோழம் என்ற சொல்லே திருத்தமான பாடம் என்பது தெளிவாகிறது.[4]

**மீட்டுருவாக்கம்:** ஓலை பழுதுபட்டதனாலும், எழுத்துத் தெளிவின்மையாலும் விடுபட்டுள்ள இடத்தை நிரப்பிப் பதிப்பிப்பது மீட்டுருவாக்கம் எனப் பெறும். இச்செயலை மேற்கொள்ளுவதற்குச் சிலவழிகள் துணைநிற்கின்றன. அவை:

1. அதே நூலில் உரையில் கிடைக்கும் சொற்கள், சொற்பொருள்கள், பிறசெய்திகள் இவற்றைக் கொண்டு விடுபட்ட மூலத்தை உறுதிப்படுத்தலாம்.

2. மேற்கோளாக வந்துள்ள பிறசுவடிகள், நூல்களின் துணைகொண்டு நிரப்பலாம்.

3. பிறநூல்களில் காணும் ஒத்த கருத்துகள் அல்லது சொற்களின் துணையாலும் நிரப்பலாம்.

---

3. திருவெம்பாவை, பா-10.
4. திருவாசகக் குறிப்புக்கள், பக். 158-159.

4 பதிப்பாசிரியர் பொருட்டொடர்பிற்கும் ஓசைப் பொருத்தத்திற்கும் ஏற்பத் தம் நுட்பத்தால் நிரப்பவும் செய்யலாம்.

எவ்வாறாயினும் நிரப்பப் பெற்ற பகுதிகளை அடைப்புக் குறிக்குள்காட்டி, அதன்காரணத்தை முன்னுரையில் சுட்டுதல் வேண்டும்.

**பிரித்துப் பதிப்பித்தல்:** கல்வி அறிவும் படிக்கும் பழக்கமும் பெருகிவரும் இக்காலத்திலும் பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களிடையே பரவிப் பயன்தரவில்லை. காரணம் என்ன? அவை செய்யுள் நடையில் அமைந்தவை; பொருளை எளிமையாக உணர்ந்துகொள்ளுமாறு அவை பதிப்பிக்கப் பெறவில்லை. கடின சந்திகளுங்கூடப் பிரிக்கப்பெறவில்லை; ஓரளவுதமிழ் பயின்றவர் அவற்றைத் தாமே துய்க்கமுடிவதில்லை. மொழியில் நெகிழ்ச்சித் தன்மை ஏற்பட்டு, எளிய நடையில் பேசுவதும் எழுதுவதும் பெருகிவரும் இக்காலத்தில் அந்த எளியநடையில் தோன்றும் நூல்களே படிக்கப் பெறுகின்றன. இந்த எளிய நடைப் பயிற்சியில் உள்ளவர்களுக்குப் பழந்தமிழ்ப் பதிப்புகள் ஐயத்தையும் மயக்கத்தையும் உண்டாக்கிவிடுகின்றன.

**கடினத்தன்மை**: அகத்தோத்து, கடறாவுபடலம், நேர்பசை, நிரைபசை, பஃறொடை, பரிசிற்றுறை, பாடாண்டிணை, மலைமகணாயகர், நந்தெய்வச்செந்தமிழ், தொல்காப்பியவேட்டுப்பிரதி, கரும்பயிலக் கூவிதரும் என்பன போன்ற தொடர்கள் கற்போரை மயக்குவனவாகிவிடுகின்றன என்றும் எடுத்துக் காட்டப்பெறுகின்றன.[5]

"காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைசேர்ப்ப"[6]
"புரவல னாடூர் பெயர்கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை"[7]

---

5. ஆய்வுக்கோவை 14ஆவது கருத்தரங்கு தொகுதி 2, பக். 159-60.

6. யாப்பருங்கலக்காரிகை வினைநிரல் நிறைக்கு எடுத்துக் காட்டு.

7. பன்னிரு பாட்டியல்-149.

என்றும் அடிகளில் முறையே கன்னித் துறை சேர்ப்ப! என்பது போன்று காது சேர்ந்த தாழ்குழையாய்! என்று விளியாகப் பொருள் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. புரவலன், ஆடு, வார் எனவும், யாங்குநீ செல்க எனவும் பிரித்துப் பொருள் காணும் நிலைமை உருவாகிவிடுகிறது.

**பிற்காலப் பதிப்புகள்:** அடிகளாகப் பிரித்தும் அடிகளில் சீர்களைப் பிரித்தும் அச்சிடும்முறை சிறிது சிறிதாக வளர்ந்துள்ளது. ஆயினும் சீரும் தளையும் பொருந்தச் சொற்கள் வகையுளி செய்யப்பெற்றன.

"பொருள்நோக்கா தோசையே நோக்கி"[8]

"நிலமிசை நீடுவாழ் வார்"[9]

என்பன. தளைகெடாது பிரிக்கப் பெற்ற அடிகள். பாவினை அறியவும் ஏற்ற சந்தம் கொடுத்து இசையுடன் படித்து மகிழவும் இம்முறை பயனுடையதாகிறது. ஆனால் பொருள்காண முயற்சி தேவைப்படுவதாகிறது.

"நூலைப் படிக்கும்போது புணர்ச்சி பிரிந்திருந்தால் தமிழின்பம் பெறலாம் என்று நாம் மயங்குகின்றோம். இன்பத்திற்கு இது இயற்கையன்று ..... ஓரைம்பது பாட்டுக்களைப் பிரித்தும் புணர்த்தும் பார்க்கும் சிறுநன்முயற்சி நமக்கு வேண்டும். இச்சிறு முயற்சிக்குச் சோம்பற்பட்டு, ஒருநோடிப்பாடல்களை முற்றும் பிரிவினை செய்து பதிப்பிக்கும் போக்குக்கு இடம் கொடுத்தலாகாது"[10] என்பர்.

"சீர்பிரித்து அச்சிடுவதில் செய்யுட்களின் இயல்பு நன்கு புலனாயிற்று. பிரிப்பதில் செய்யுள் இலக்கணத்தை முக்கியமாகக் கவனித்து வந்தமையினாலே அச்செய்யுட்களில் பிழையிருக்குமாயின் அவை எளிதில் புலப்படுதற்கும் இடம் ஏற்பட்டது ...... மேலும் சீர்களைப் பிரித்தல் இசையின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது.

---

8. யாப்பருங்கலக்காரிகை, வகையுளி—எடுத்துக்காட்டு.
9. குறள் 4. இரட்டைக்காப்பியங்கள், பதிப்புரை, 10.பக்.72.

பொருளுணர்ச்சிக்குச் சீர்பிரிப்பதைக் காட்டிலும் சந்தி பிரிப்பது அவசியம் ... .... அடிபிரித்தல், சீர்பிரித்தல், சிறுள்ளே சந்திபிரித்தல், பதங்களைப் பிரித்தல் என வரும் பரிணாமக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம்''.[11] என்பதும் ஒருகருத்து.

**சந்தியும் மொழியும்:-** சீரில் அமையும் கடினசந்தியைப் பிரித்துப் பதிப்பித்து நூலை எளிமைப்படுத்தித்தரும் முறையாகும். ஆனால் சந்தி முறை என்பது தமிழ்மொழியின் ஒரு தனிச்சிறப்பாகும். இது ஓசை அடிப்படையில் அமைவதோடன்றிப் பொருளை அடிப்படையாகக்கொண்டும் அமைகிறது. பொருள் உணரச் சந்தி பெருந்தடையாகிறது; பிரித்து அமைப்பதால் ஓசை இன்பம்கெடுகிறது; சீர்தளை சிதைகிறது; ஆனால் பொருளைப் புரிந்துகொள்ள எளிமையாகிறது. இந்த இருவேறு கருத்துகளையும் பதிப்பாசிரியர் உளங்கொள வேண்டும். பாட்டின் ஓசை குறையாவண்ணம், சீர்தளை சிதையா வண்ணம், மொழி இயல்பு மாறாவண்ணம் அமைத்துப் பதிப்பிப்பதே பாடல், உரைநடை என்பவற்றிடையே உள்ள வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவதாகும். சந்திகளைப்பிரித்துக் காட்டிப் பொருள் உணரவைக்கும் முறையைப் பிரித்துக்காட்டுதல், குறிப்புரை தருதல், உரைவிளக்கம் தருதல் முதலியவற்றால் மேற்கொள்ளலாம்.

**உரைநடைப் பதிப்பு:-** பாட்டில் சீர்தளை சிதையாது ஓசையின்பத்தை உணருமாறு பதிப்பிப்பதுபோலவே உரைநடையிலும் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் பதிப்பிப்பது பொருள் விளக்கத்திற்கு அவசியமாகிறது சான்றாக.

தமிழ் என்பது ஒருதனிச்சொல். மொழி என்பதும் ஒருதனிச் சொல். தமிழ்மொழி என்றுவரும்போது தனித்தனியே இடைவெளிவிட்டுப் பதிப்பித்தல் கூடாது, இணைந்த அவை ஒரு பொருளை உணர்த்துவன.

---

11. திவ்வியப் பிரபந்தம், முதலாயிரம், பதிப்புரை.

# திருத்திப் படியுங்கள்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 3 | துண்மை | நுண்மை |
| | 9 | வரையோடு | உரையொடு |
| | 20 | கருத்துக்களை | கருத்துகளைக் |
| 12 | 19 | வெள்ளைத்தூள் | வெள்ளைத்தாள் |
| 12 | 23 | தாயைப்போல | தாயைப்போல் |
| | 24 | தந்தையைப்போல | தந்தையைப்போல் |
| 13 | 12 | Emphasis—அமுத்தம் | Emphasis — அழுத்தம் |
| | 30 | word choice— சொற்தேர்வு | word choice— சொல் தேர்வு |
| 14 | 15 | 1970-க்கு பிறகு | 1970ஆம்ஆண்டிற்குப் பிறகு |
| 17 | 3 | தமிழ் | தமிழில் |
| | 11 | நட்டமெனத் | நாட்டமெனத் |
| 18 | 1 | இயற்பு இயல் | இயல்பு இயல் |
| 18 | 2 | இயைபு இயல் | வேதியியல் |
| | 6,7 | வெளிவந்துள்ளன. இத்துறைகளில் | இத்துறைகளில் வெளிவந்துள்ளன. |
| | 10 | Mase | Mass |
| | 18 | உடனடியாக | உடனடியாகப் |
| | 23 | உணர்வியல் களைக் | உணர்வியல் நூல் களைக் |
| 19 | 4 | ஓவியத்தை | ஓவியத்தைத் |
| | 7 | மனதில் இருத்தி | மனத்தில் இருத்திக் |
| | 8 | கானகத்தையும் | கானத்தையும் |
| 20 | 6 | விளக்கத்திற்து | விளக்கத்திற்குத் |
| | 12 | படித்து | படித்துப் |
| | 16 | சிறப்பாக | சிறப்பாகச் |

| | | | |
|---|---|---|---|
| | 16 | அச்சிட | அச்சிடக் |
| | 21 | நிறுத்தக் குறிகளை | நிறுத்தக் குறிகள் |
| 21 | 2 | நூல்களுள் | நூல்களைப் |
| | | பார்த்து படித்து | பார்த்துப் படித்துப் |
| | 7 | பார்த்து படித்து | பார்த்துப்படித்துச் |
| | 10 | அமைப்பை | அமைப்பைக் |
| | 20 | அச்சுப்புள்ளிகளை | அச்சுப்புள்ளிகளைச் |
| 22 | 1 | மெய்ப்படிப் | மெய்ப்படி |
| | 4 | மெய்ப்படிப் | மெய்ப்படி. |
| | 7 | பதிப்பாசிரியர் இடமுள்ள | பதிப்பாசிரியரிடமுள்ள |
| | 8 | அச்சுவேலையை | அச்சுவேலையைக் |
| | 17 | எழுத | எழுதப் |
| | 19 | நேராக | நேராக, |
| | 28 | மெய்ப்புப் பாப்பவர் | மெய்ப்புப் பார்ப்பவர் |
| | 29 | பொறுப்பிலேய | பொறுப்பிலேயே |
| | | கருதியப்படி | கருதியபடி |
| 23 | 4 | அறிவுரைக் | அறிவுரை |
| | | வசகு | வசதி |
| | 5 | உணரவேண்டும்படி எடுப்பவர். | உணரவேண்டும் படியெடுப்பவர். |
| | 6 | வேண்டியவைகளை | வேண்டியவைகளைக் |
| | 13 | இவைகளுக்கு | இவைகளுக்குக் |
| | 14 | உறைகளும் | உரைகளும் |
| | 18 | அடிக்குறிப்பாக | அடிக்குறிப்பாகக் |
| | 21 | தவிர்க்க | தவிர்க்கப் |
| | | முழுமையாக | முழுமையாகப் |
| | 24 | பகுதிகளை | பகுதிகளைப் |
| 24 | 4 | நூற்பகுதிகளை | நூற்பகுதிகளைப் |
| | 8 | தூக்கத்தை | தாக்கத்தை |
| | 9 | படிப்புக்கு | படிப்புக்குப் |
| | 11 | வருனணைகள் | வருணனைகள் |
| | 14 | சிறப்பமைப்பு | சிறப்பமைப்புக் |
| | | கலைச்சொற்களை | கலைச்சொற்களைச் |
| | 15 | அமைத்து | அமைத்துப் |
| | 18 | அமைத்து | அமைத்துக் |

| | | | |
|---|---|---|---|
| 25 | 2 | ஆங்கநாதன் | அரங்கநாதன் |
| | 3 | உருவாக்சுப்பட்ட | உருவாக்கப்பட்ட |
| | 5 | இங்கு | இங்குக் |
| | 7 | பகுதியாக | பகுதியாகப் |
| | 8 | சிறப்பாக | சிறப்பாகச் |
| | 10 | இணைக்கவேண்டும் | இணைக்கப்பட வேண்டும் |
| | 11 | இவைகளை | இவைகளைப் |
| (உள் தலைப்பு எண்) | | 50 | 5.1 |
| | 16 | பகுதறிவுக் குறிப்பு | பதிப்பாசிரியர் குறிப்பு |
| | 17 | பிழைத்திருத்தம் முதலியவைகளை | பிழைதிருத்தம் முதலியவைகளைக் |
| | 18 | பகுதியாக | பகுதியாகத் |
| | 25 | சிக்கணம் கருதி | சிக்கனம் கருதித் |
| 26 | 3 | இந்திய | இந்தியத் |
| | 6 | நூற்றொகை | நூற்றொகைக் |
| | 13 | தகும் | தரும் |
| 27 | 18 | இயக்குனர் | இயக்குநர் |
| | 19 | இப்பாணி | இப்பாணியை |
| | 20 | நெறிக்கு | நெறிக்குத் |
| | 23 | ஒதுக்கிவிட்டு | ஒதுக்கிவிட்டுத் |
| | 25 | அமைய வேண்டும். | அமைக்க வேண்டும். |
| 28 | 1 | இடபக்க | இடப்பக்க |
| | 2 | அமைக்க | அமைய |
| | 5 | படிப்புத்தகுதி | படிப்புத்தகுதியைப் |
| | 11 | பக்கத்திற்கு | பக்கத்திற்குப் |
| | 21 | otherwire | otherwise |
| | 25 | நடவடிக்ஹை | நடவடிக்கை |
| | | நூலை | நூலைத் |
| | | உரிமை | உரிமைப் |
| 29 | 1 | மீறி | மீறிப் |
| | 2 | தொகையை | தொகையைக் |
| | 3 | கொடுந்து | கொடுத்து |

| | | | |
|---|---|---|---|
| | 8 | நூல் தொடர்புதுறை சிறப்பினர் | நூல் தொடர்புத் துறைச் சிறப்பினர் |
| | 14 | பதிப்புளா | பதிப்புரை |
| | 24 | பிழைத்திருத்தம் | பிழைதிருத்தம் |
| | 27 | மொய்படிப் | மெய்ப்படி |
| 30 | 1 | சுமத்தி | சுமத்திப் |
| | 2 | மீறி | மீறிப் |
| | 2,3 | அதை கதை தொகுத்து | அதைத் தொகுத்துப் |
| | | பக்கவாரியாக | பக்கவாரியாகப் |
| | 7 | பிரிவுப்பகுத்தி | பிரிவுப்பகுதித் |
| | 9 | எதிராக | எதிராகப் |
| | 12 | நூலோட்டுத்தில் | நூலோட்டத்தில் |
| | 17 | அமைத்து | அமைத்துச் |
| | 20 | அணைத்த பிறகு | இணைத்த பிறகு |
| | | இவைகளை | இவைகளைப் |
| | 23 | இணைப்புதான் | இணைப்புத்தாள் |
| | 26 | பத்தைகளை | பத்தைகளைப் |
| | | பிறபலகைகளை | பிறபலகைகளைப் |
| 31 | 7 | ஒரு | ஓர் |
| | 8 | Jacket) | (Jacket) |
| | 9 | நூலக்கும் | நீக்கும் |
| | 12 | அட்டையை | 1. அட்டையை |
| | 26 | இன்று அடிபடிப்புத் தகும். முன் மடிப்பு | இன்று அது முன் மடிப்பு |
| | 20 | பின் குறிப்பு | பின் மடிப்பு |
| 32 | 3 | கூடறான | கூறான |
| | 4 | வழவழப்பாக | வழவழப்பாகப் |
| | | பளபளப்பாக | பளபளப்பாகக் |
| | 6 | விரைப்பாகவும் | விறைப்பாக்கவும் |

| | | | |
|---|---|---|---|
| 32 | 6 | தட்பவெப்பத்தால் | தட்பவெப்பத்தால் |
| | | பாதிப்பைத் | ஏற்படும் பாதிப்பைத் |
| | 12 | பொதுவாக | பொதுவாகக் |
| | 13 | புக்கு | புக்குப் |
| | | அமைக்கப்பட்டது | வெள்ளை நிறத்தில் |
| | | வெள்ளை நிறத்தில் | அமைக்கப்பட்டது. |
| | 18 | ஒப்பிடும் படியாக | ஒப்பிடும்படியாகப் |
| 33 | 4 | இப்படி | இப்படிக் |
| | 5 | மேலடைப்புப்பகுதிகளை | மேலடைப்புப் பகுதி களைக் |
| | | வசதியாக | வசதியாகக் |
| | 6 | பயன்களை | பயன்களைக் |
| | 9 | நூலை | நூலைத் |
| | 11 | கையை முத்துப்படியை | கையெழுத்துப்படியைக் |
| | 23 | காகிதித்தைப் | காகிதத்தைப் |
| | 24 | இன்றையத் | இன்றைய |
| 34 | 2 | வளவளப்பானதாக | வழவழப்பானதாக |
| | 4 | நூல் | நூலை, |
| | 6 | என்பது | என்பதை |
| | 9 | தயாரிக்கப்பட்டு | தயாரிக்கப்பட்டுக் |
| | 18 | கணித்து | கணித்துப் |
| | 21 | நூலை | நூலை, |
| | 22 | உறுத்தயில் | உறுத்தாமல் |
| | 28 | அமைக்கவேண்டும் | அமைக்கப்பட வேண்டும். |
| 35 | 1 | (Print points | (Print points) |
| | 3 | ஏற்ப | ஏற்பப் |
| | 5 | காட்ட | காட்டத் |
| | 12 | செமீரும் | செ.மீ.ரும் |

| | | | |
|---|---|---|---|
| 36 | 2 | உட்படுத்தி கட்டுக்கட்டி | உட்படுத்திக் கட்டுக்கட்டி |
| | | வைத்தால் தான் | வைத்தால்தான் |
| | 11 | திரும்பி சுருட்டி வைக்க | திரும்பிச் சுருட்டி வைக்கச் |
| | 20 | தொடர்ந்துப் | தொடர்ந்து |
| | 22 | ஏற்பட்டு | ஏற்பட்டுக் |
| 37 | 3 | வைத்து | வைத்துத் |
| | 5 | இணைப்பு | இணைப்புத் |
| | 8 | சாட | இட |
| | 11 | சுளுவாக்க | சுளுவாக்கத் |
| | 16 | இதை மாற்ற செம்பு | இதை மாற்ற, செம்புக் |
| | 17 | துரு வேறாக் | துருவேறாக் |
| | 18 | பக்கத்தை | பக்கத்தைக் |
| | 22 | நிறுவனங்களுக்கு | நிறுவனங்களுக்கு, |
| 38 | 9 | இணைத்து | இணைத்துப் |
| | 15 | விமர்சனம் | விமர்சனம் |
| | 20 | நூலாக்குகர் | நூலாக்குநர் |
| | 22 | இணைப்புக்கு | இணைப்புக்குப் |
| 39 | 1 | பகுதியை | பகுதியைக் |
| | 7 | றியது இங்கு | றியது. இங்குப் |
| | 11 | தமிழ்நாட்டில் | தமிழ்நாட்டில், |
| | 14 | முனையினால் | முறையினால் |
| | 18 | அளவுக்கு | அளவுக்குத் |

| | | | |
|---|---|---|---|
| 39 | 19 | பெற்றனர் | பெற்றன. |
| | 20 | வெளியீட்டுத்துறைச் | வெளியீட்டுத்துறை |
| | 25 | வெளியீடும் | வெளியிடும் |
| 40 | 3 | அரசாக | அரசாங்க |
| | 4 | இராசாரம் | இராசாராம் |
| | 9 | நூலகத்துறை | நூலகத்துறை, |
| | 19 | அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கு | அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்குத் |
| 41 | 8 | முயன்றல் | முயன்றால் |
| 42 | உள் தலைப்பு | பதிப்பாசியர் தேர்வு: | பதிப்பாசிரியர் தேர்வு: |
| | 10 | நூலுக்குறி | நூலுக்குரிய |
| | 13 | 'சுவர் எழுப்பிவர்' | 'சுவர் எழுப்பியவர்' |
| | 19 | கடிய தொன்றும் | கடியதென்றும் |
| 44 | 24 | எட்டு | எ—டு |
| 45 | இறுதிவரி | அந்திமாலைச் | அந்திமாலை |
| 48 | இரண்டாம்உள் தலைப்பு | பரடும் | பாடும் |
| 51 | 1 | விள கங்கள் | விளக்கங்கள் |
| 52 | 26 | தலைமைப் | தலைமை |
| 54 | 2 | திறந்தனவாகிய | திறத்தனவாகிய |
| | 17 | செய்யுட்ளை | செய்யுட்களை |
| 58 | 1 | இராமாநுடக் | இராமானுசக் |
| | 21 | பதிப்பாசிரியராலும் | பதிப்பாசிரியரையும் |
| | 26 | உணரவரையப் பட்டுள்ளது. | உரைவரையப் பட்டுள்ளது. |
| 59 | 13 | என்றார | என்றாய் |

| | | | |
|---|---|---|---|
| 65 | 3 | அழகிகளை | அழகினை |
| | 8 | பதிப்பிற் குரிய | பதிப்பிற்குரிய |
| | 21 | ஒன்றும்பிற் சேர்க் | ஒன்றும் பிற்சேர்க் |
| | 23 | பதிக்கும் | பதிப்பிக்கும் |
| 66 | 10 | நூலினைளப் | நூலினைப் |
| | 19 | எடுத்துக்கட்டாகக் | எடுத்துக்காட்டாகக் |
| | 25 | பார்த்தப்பதிப்பித்தலே | பார்த்துப் பதிப்பித்தலே |
| 68 | 5 | வேண்டும்? | வேண்டும்?'' |
| | 7 | எழுதப்பட்டிருப் | எழுதப்பட்டிருப் |
| | | பனற்றை | பனவற்றை |
| | 8 | தாகும். | யாகும். |
| | 8 | உதாரணமாக | உதாரணமாகப் |
| 70 | 1 | பொருட்தொடர்பிற்கும் | பொருட்டொடர்பிற்கும் |
| | 10 | பதிபிக்கப் | பதிப்பிக்கப் |
| | 24 | துறைசேர்ப்ப''6 | துறைச்சேர்ப்ப''6 |
| 71 | 1 | துறை சேர்ப்ப! | துறைச்சேர்ப்ப! |
| | 17 | ஒன்று | என்று |

*   *   *

குறிப்பு: திரு.வே.தில்லைநாயகம் எழுதிய 'பதிப்புநெறி முறைகள்' எனும் நூலின் முதற்கட்டுரையுள் இடம் பெற்றுள்ள பத்திகளின் தலைப்பின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள 12 முதல் 99 வரையிலான எண்களை 1.2, 1.3 எனத்தொடங்கி 9.8, 9.9 எனத் திருத்தி வாசிக்கவும்.